போர்வாள்

வாள் 4 | வீச்சு

அங்கே அப்படி! இங்கே இப்படி!

தென்னாட்டு உழவர்கள், தங்களிடமிருந்து ஆட்சியாளர்களால் வாங்கப்படும் அரிசியின் விலையைக் கொஞ்சம் கூட்டித்தரவேண்டுமென்று ஓமந்தூரார் காலம் முதல் கேட்கின்றனர் இல்லை—முடியாது என்று கண்டிப்பாகப் பேசுகிறது டில்லி. ஆனால் சென்ற மாதம், வடநாட்டு சர்க்கரை முதலாளிகள் சர்க்கரை விலையைக் கூட்டித்தானாகவேண்டும் என்றனர். உடனே ஒப்புக்கொண்டுவிட்டது டில்லி. ஏன்?...ஏன் இந்த ஓரவஞ்சனை?

ஆசிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A.(HONS)

விலை ௨ ண

Best copy available.

அமைதியாக இருந்தவர்கள் மீது ஆணவம் மிக்க நடவடிக்கையா?

—(0)—

அக்கிரமமான போக்கு இது!
அனைவரும் வாரீர் ஆட்சேபக் குரலெழுப்ப!

—X—

அறிஞர் அண்ணாதுரை வேண்டுகோள்.

திராவிடமுன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள், கீழ்க் கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்கள் :—

மத சமுதாய அரசியல், பொருளாதார அடிமைத்தனத்திலிருந்து திராவிடப்பெருங்குடி மக்களை விடுவித்து அவர்களைப் புதுவாழ்வுபுரிக்கு அழைத்துச் செல்லும் பணியை, திராவிட முன்னேற்றக் கழகம், சென்ற ஓராண்டுகாலமாக தமிழ்நாடெங்கும்; மிக அமைதியான முறையில் நடத்தி வந்திருக்கிறது. பலாத்காரப் பாதைவழி நடப்பதோ, துவேஷ உணர்ச்சிகளை ஊட்டுவதோ இந்தக் கழகத்தின் நோக்கங்கள் அல்ல. அல்லது சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள இன்றைய சர்க்காரைக் கவிழ்க்கவேண்டும் என்ற கருத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது. திராவிடப்பெருங்குடி மக்களின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை, புது எழுச்சியை, மறுமலர்ச்சி எண்ணத்தை உருவாக்குவது ஒன்றுதான் இக் கழகத்தின் நோக்கம். ஆனால் இக் கழகத்தின் பகுத்தறிவுப் பிரசாரத்தை நாஸ்திகப் பிரசாரம் என்றும், சமயநீதிக் கிளர்ச்சியை வகுப்புத் துவேஷக் கிளர்ச்சி என்றும் சிலர் திரித்துக் கூறிவருகிறார்கள்.

[redacted]

ஆட்சி நிலவுகிறது என்றால் அங்கே எழுத்துரிமையும் பேச்சுரிமையும் இருந்தாகவேண்டும். இப்போது இருக்கிற ஆட்சி மக்கள் ஆட்சி. ஆதலால், இந்த ஆட்சி, நிச்சயமாக, எழுத்துரிமை பேச்சுரிமை இவற்றைக் கண்ணெனப் போற்றி வளர்க்கும் என்ற உறுதியான நம்பிக்கை காரணமாக, திராவிட முன்னேற்றக் கழகம், ஓர் அந்நிய கலாசாரத்தாலும் (ஆரிய கலாசாரம்) சம்பிரதாயம் என்ற காரணத்தாலும் திராவிட மக்கள்மீது சுமத்தப்பட்டுள்ள பல்வேறு கொடுமைகளை எதிர்த்துத் தன் கண்டனக் குரலை எழுப்பி வந்திருக்கிறது.

ஆனால், நாங்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக, காங்கிரஸ் ஆட்சியாளர்கள், எழுத்துரிமையையும் பேச்சுரிமையையும் பறிக்கத் தொடங்கிவிட்டதால், நாங்கள் எங்களுடைய நியாயமான இலட்சியத்தை அடைவதற்கான அமைதியான பணியைத் தொடர்ந்து ஆற்றமுடியவில்லை. எங்களுடைய புத்தகங்கள் பல தடை செய்யப்பட்டுவிட்டன. அவற்றின் ஆசிரியர்கள்மீது வழக்குகள் பல தொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் நாடகங்கள் பலவற்றின்மீது தடை உத்தரவு வீசப்பட்டிருக்கிறது. நீதியோ நேர்மையோ இன்றி தி. மு. க. கூட்டங்கள்

[redacted]

ரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மிகவும் அமைதியான முறையில் பணியாற்றி வரும் எங்கள்மீது இத்தகைய அடக்குமுறைகளை வீசுவது சிறிதும் நியாயமல்ல என்பதையும், எழுத்துரிமையும் பேச்சுரிமையும் ஒரு ஜனநாயக நாட்டில் ஒவ்வொரு பிரஜைக்கும் தரப்பட்டாகவேண்டிய அடிப்படை உரிமைகள் என்பதையும், எனவே இந்தக் கழகத்தின்மீது வீசப்பட்டுள்ள தடைகள் அனைத்தையும் விலக்கி, எழுத்துரிமை பேச்சுரிமைகளை மீண்டும் நிலை நாட்டுவது ஆட்சியாளர்கள் கடமை என்பதையும் தெளிவாக விளக்கி, எங்கள் மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் பல தீர்மானங்களை நிறைவேற்றி ஆட்சியாளர்கட்கு அனுப்பிவைத்தோம். ஆனால், ஆட்சியாளர்கள் போக்கில் எத்தகு மாறுதலும் ஏற்படவில்லை. எனவே, பிரஜா உரிமைகட்கு விதிக்கப்பட்ட தடைகளை மீறியாக வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டு விட்டோம்.

எங்கள் இலட்சியம் திராவிடத் தனி நாடு ஆகையால், சென்னை ஆட்சியாளர்களை, டில்லி சர்க்கார், எவ்வளவு துச்சமாகக் கருதுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டியாக வேண்டிய அவசியமும் எங்கட்கு

(14-ம் பக்கம் பார்க்க)

★ கடன் தீர்ந்தது ★

[பு. ச. "முருகு"]

இரவு பத்து மணி இருக்கும். அந்த ஏரிக் கரையின் பக்கலில் ஜன நடமாட்டமே நின்று விட்டது. ஏரியைச் சுற்றி ஓர் வீதி வளைந்து சென்று கொண்டிருந்தது. எங்கும் நிசப்தம் நிலவியது. ஏரியில் அடுக்கடுக்காக வரும் அலைகள் கல்லின் இடுக்குகளிலே மோதுவதால் உண்டான சத்தம் நிசப்தத்தை கலைத்தது. வான வீதியிலே சந்திரன் ஓடிக் கொன்டிருந்தான், அவ்வப்பொழுது மேக சன்னிகைகள் அன்பினால் அவனை அணைத்துக் கொண்டனர்.! தாரகைகள் நீல வானில் ஒட்டிக் கொண்டு ஜாலவித்தை காட்டிக் கொண்டிருந்தன.

பாண்டுரங்கம் எப்பொழுதும் போல உலவச் சென்றுவிட்டு அந்த ஏரிக்கரையின் பக்கமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தான். திங்களின் பிம்பம் நீரின் மேல் கர்ணுதற்கு வெள்ளித் தகட்டினால் போட்ட வீதி தனக்கு நேராக இருப்பது போல இருந்தது.! ஏரியைக் கடந்துதான் அவன் வீட்டையடைய வேண்டும். இளந்தென்றல் அவனுக்குத் துணையாக வந்து கொண்டிருந்தது. அவன் திடீரென்று தூரத்தில் இருளில் ஏதோ ஒரு உருவம் ஏரியின் அழகான இடத்தின் அருகில் இருந்த ஒரு கல்லின்மேல் நின்று கொண்டிருந்ததை கவனித்தான். அது யாராக இருக்கலாம்? ஏன் இந்த இரவில் இங்கு நிற்கவேண்டும்...! ஒருக்கால் தற்கொலை செய்து கொள்ள வந்த பெண்ணாகவோ ஆணாகவோ இருக்கலாமா; என்று எண்ணிக் கொண்டே பாண்டு விறு விறுப்பாக நடந்தான். அதற்குள் அந்த உருவம் நீரில் விழுந்தது!

பாண்டுரங்கம் அருகில் ஓடினான். அப்பொழுதுதான் நிலா ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தது! முகிற் கூட்டத்திற்குள் முகத்தை மறைத்து 'கண்ணாம் பூச்சி' விளையாட்டும் ஆடியது. எங்கும் ஒரே இருள் சூழ்ந்தது. பின்னர் ஓர் இடத்தில் நீர் தளும்பவே பாண்டு அங்கு குதித்தான். அந்த உருவம் வெளியில் கொண்டு வரப்பட்டது!

பாண்டுரங்கத்திற்கு வீட்டில் தூக்கமே வரவில்லை! அவன் ஏன் விழவேண்டும்—? அவனை எவனோ வஞ்சித்திருக்கவேண்டும். இளம் வயதில் இறக்கத் துணிந்துவிட்டானே, என்று எண்ணிக் கொண்டே படுக்கையின் மேல் புரண்டுகொண்டிருந்தான். அருகில் இன்னொரு படுக்கையில் தற்கொலை செய்துகொள்ளச் சென்ற அந்த இளைஞன் படுத்திருந்தான்.

"எப்படி இருக்கிறது?" என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான் பாண்டு.

"இப்பொழுது பரவாயில்லை!"

"இதோ இந்த 'வில்ஸ்' சிகரெட்டைப் பிடியுங்கள். எல்லாம் சரியாகிவிடும்" என்று கூறிக் கொண்டே, பாண்டு ஒரு 'வில்ஸ்' சிகரெட்டை எடுத்தான்.

அந்த இளைஞன் மெதுவாக பேச ஆரம்பித்தான். "என்ன அன்பரே! நான் ஏன் விழுந்தேன் என்று ஆச்சர்யப் படுகின்றீரா...?"

"நான் நினைக்கக்கூட முடியவில்லை! நீ ஏதோ ஒரு முடிவிற்கு வந்துதான் விழுந்திருக்கவேண்டும். வெறும் பொழுது போக்கிற்காக விழுந்திருக்க மாட்டாய் என்பது மட்டிலும் நிச்சயம்...அல்லவா..." என்றான் பாண்டு சிரித்துக்கொண்டே.

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர். பின்னர் மீண்டும் உரையாடலைத் தொடர்ந்தனர். இளைஞன் மெதுவாகக் கூறினான்," என் உள்ளத்தில் எவ்வளவோ விஷயங்கள் புதைந்து கிடக்கின்றன. நான் உங்களிடத்தில் அவற்றைக் கூறினால்தான் மனம் நிம்மதியடையும்" என்றான்.

"நானும் அதைத்தான் கேட்க இருந்தேன்", என்று பாண்டுரங்கம் தொடர்ந்து கூறினான்.

"என் கதையைக் கேட்டால், என்னை நீங்கள் மிகவும் இழிவாக எண்ணுவீர்கள்..."

"அட...இந்த உலகம் யாரைத்தான் இழிவாகக் கருதவில்லை! வாய்க்கு என்ன பூட்டா இருக்கிறது? ஒருவரிடம் உள்ள குற்றத்தைக் காண்பதுதானே இன்று உலகினரின் போக்காக ஆகிவிட்டிருக்கிறது. நீ உன் கதையைத் தயக்கமின்றி கூறும் தோழரே, கேட்போம்" என்று கூறிக் கொண்டே ஒரு சிகரெட்டைக் கொளுத்தினான்.

புகை காற்றிலே கலந்து கொண்டிருந்தது! வெளியில் தோட்டத்திலிருந்து நறுமணம் தாங்கி வந்த தென்றல் புகையை வெளியே விரட்டியது! சிறு பூச்சிகள் இசைத்த இசையை அங்கு கேட்டுக் கொண்டிருந்தது!

அந்த இளைஞன் ஆரம்பித்தான்...

"என் பெயர் பாலகிருஷ்ணன். நான் காட்டுப்பட்டி ஜமீனுக்கு அடுத்துள்ள ஒரு கிராமத்தில் வசிப்பவன். என் தந்தைக்கு ஒரு பத்து ஏக்கர் பூமி இருந்தது" என்றான்.

அதற்குள் பாண்டு, "எனவே உனக்கு ஒரு குறையும் இல்லையே" என்றான்.

"இருங்கள் கூறுகின்றேன். என் அன்னை சிறுவயதிலேயே காச நோயில் இறந்து விட்டாள். நோய்க்கு வைத்தியம் செய்ய என் தந்தை பணம் இல்லாமல் பக்கத்து ஊர் காட்டுபட்டி ஜமீன்தார் குமாரசாமி முதலியாரிடம் கொஞ்சம் கொஞ்சமாக ஆயிரத்துக்குமேல் கடன் வாங்கிவிட்டார். பின்னர் எனக்குத் திருமணம் நடந்த பொழுதும், அந்த பூமியைக் காட்டியே இன்னும் கொஞ்சம் கடன் வாங்கினார்."

"எனவே உன் வாழ்க்கையே கடன் வாழ்க்கை ஆகிவிட்டதா...?" என்றான் பாண்டு.

"இல்லை; இன்னும் இருக்கிறது கேளுங்கள், பிறகு என் தந்தை நோய்வாய்ப்பட்டு சென்ற மாதத்தில்தான் இறந்து போனார். மொத்தக் கடன் இப்பொழுது ஆயிரத்திற்கு மேலாகி விட்டது. அதைத் தீர்த்துவிட எங்கள் பூமியை விற்றுவிட்டு அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு குமாரசாமி முதலியார் வீட்டிற்குப் போனேன்,

"அப்பொழுது கடனைத் தீர்த்து விட்டீரா? இன்னும் எவ்வளவு மிச்சம் இருக்கிறது ...?

"இல்லையே! கடனை எங்கு தீர்ப்பது? அந்தப் பணம் போய் விட்டது!"

"என்ன...? தொலைத்து விட்டீர்களா? போலீசுக்கு அறிவித்தீரா?"

"அப்படித் தொலைக்கவில்லை! சீட்டாடடத்தில் தோற்று விட்டேன்"

"வியப்பாக இருக்கிறதே......! யாரிடத்தில் தோற்றீர்?"

"அந்த ஜமீந்தாரிடத்தில்தான்! நான் போனபோது சீட்டாடிக் கொண்டிருந்தார். என்னையும் அழைத்தார். உட்கார்ந்தேன். கொண்டுபோன பணம் எல்லாம் 'பைசல்' ஆகிவிட்டது."

பாண்டுவின் மனம் வேதனையிலாழ்ந்தது! அவன் கேட்டான்,

"நீ இப்படிக்கூட சீட்டாடுவது உண்டா" என்று! அதற்கு பாலு தலை குனிந்துகொண்டே கூறினான், "இல்லை...! ஆனால்...நிலைமை அவ்வாறிருந்தது! பணத்தை இழந்ததோடு மட்டிலும் போகவில்லை! அந்தப் பழைய கடனை வேறு கொடுக்க வேண்டுமென்று பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டான் பாவி" என்றான் பாலு.

"காட்டுப்பட்டி ஆசாமி! இந்த ஊருக்கு எப்படி வந்தாய்...?"

"அதுதான் வேலை தேடிக் கொண்டு! அங்குதான் பிழைக்க வழியில்லையே. இங்காகிலும் வேலை பார்க்கலாம் என்று வந்தேன். உம்! வேலை கூடக் கிடைக்கவில்லை! எனவேதான் மனம் உடைந்து..."

"ஏரியில் விழுந்தாயா? என்ன? ஒரு இளம் மனைவியை விட்டு விட்டு ஏரியில் விழுவதா? அப்பொழுது உன் மனைவியின் கதி என்னவாகும். அதை நீ சிந்தித்தாயா?"

பாலு மௌனமாக இருந்தான்!

"பாலு, உனக்கு இப்பொழுது என்ன வேண்டும்? தோற்றுப் போன ரூபாயும், அந்தப் பத்திரமும் தானே?"

"ஆமாம்..."

"சரி. நீ போய் நிம்மதியாகத் தூங்கு. அந்தப் பொறுப்பை நான் எடுத்துக்கொள்கிறேன். எப்படியாகிலும் அவை உன்னை வந்து சேரும்" என்று கூறிக்கொண்டே புரண்டு தன் போர்வையை எடுத்து போர்த்திக் கொண்டான்.

காலை, பாண்டுரங்கம் ஜமீந்தார் குமாரசாமி முதலியாரைக் காண ஊருக்குப் புறப்பட்டான். அவனே ஒரு கலைஞன்! அதிலும் அவன் நடிக்க ஆரம்பித்துவிட்டால், எல்லோரும் உண்மையென்றே கருதி விடுவார்கள்.

மிகவும் டாம்பீகமாக உடை உடுத்திச் சென்ற பாண்டுரங்கத்தை முதலியார் உவகையுடன் வரவேற்று உள்ளே ஒரு அறையில் அமரச் செய்தார்.

பாண்டு, உரையாடலை மிகவும் சாதுர்யமாகவே ஆரம்பித்தான்.

"நான் ஒரு வைர வியாபாரி. வெளி நாடுகளுக்கெல்லாம் வியாபாரம் செய்கிறேன். இந்த ஊரில் ஒரு ஜமீன் வாங்கவேண்டுமென்று எனக்கு வெகுநாட்களாக எண்ணம் இருக்கிறது. உம்! இப்பொழுது அந்தக் காலம்போல் இல்லை! நீங்களெல்லாம் பழைய மனிதர்கள். எனவே உங்களையெல்லாம் நன்றாக நம்பலாம். மோசம் செய்ய மாட்டீர்கள்! முதலியார்வாள், என் தந்தைகூட, உங்களைப்பற்றி அடிக்கடி பேசுவதுண்டு..." என்று அளந்து கொண்டே போனான் பாண்டு.

குமாரசாமி முதலியாருக்கு பண விஷயமென்றாலே மிகவும் ஆர்வம். அதிலும் வைர வியாபாரி என்றால் கேட்கவாவேண்டும். இளவேனிற் காலத்து இளம் தென்றல் அடிப்பதுபோல இருந்தது அவருக்கு!

"ஆமாம் சார். வரவர இந்த ஜமீன் பெரிய தொல்லையாகப் போய்விட்டிருக்கிறது. அதிலும் என் தலைக்குப் பிறகு யாரும் அவ்வளவு நன்றாக கவனிப்பவர்கள் இல்லை! அதுதான் யோசிக்கிறேன். ஜமீனை நன்றாக பார்த்துக்கொள்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, எனக்கு விற்பதற்கு என்னவோ ஆசைதான். அதிலும் சிலர் ஜமீன் ஒழிப்பு மசோதா அமுலுக்கு வரவேண்டுமென்று துள்ளி குதிக்கிறார்கள். அதனால் நானும் யோசனை செய்கிறேன்" என்று கூறினார் முதலியார்.

* * *

அந்த ஜமீனைப்பற்றி காலையில் பாலுவிடத்திலிருந்து என்னென்ன தெரிந்துகொண்டானோ, அவ்வளவையும் தான் அறிந்ததுபோல பெருமையாகப் பேசினான் பாண்டுரங்கம். முதலியார் அவனை நம்பி விட என்னென்ன சூழ்ச்சிக் கணைகளைப் பயன்படுத்த வேண்டுமோ அவ்வளவையும் பயன்படுத்தினான். இறுதியில் அவனுடைய வியாபாரத்தையும் ஒருவாறு முடித்துக் கொண்டான். பாண்டுரங்கத்தை ஜமீந்தார் தம் குடும்பத்தில் ஒருவன் என்றே எண்ணிவிட்டார்.

"பாண்டு, இன்று இரவு இங்கேயே தங்கிவிடு; நாளை காலை ஊருக்குப் புறப்படேன்" என்று கூறினார் முதலியார்.

"இல்லை! இல்லை! ஒரு அவசர வேலை இருக்கிறது. நான் இன்று இரவே அங்கு இருக்கவேண்டும். அதற்குத்தான் காரில் ஓடி வந்தேன்", என்றான் பாண்டு,

"அதென்னப்பா, ஒரு இரவு தங்கினால்கூட காரியம் கெட்டு விடுமா...?"

"இல்லை...ஒரு பெண்ணுக்கு..."

"பெண்ணுக்கு என்ன......? போய்ப் பார்க்க வேண்டுமா?" என்று சிரித்துக் கொண்டே இழுத்தார்.

"இல்லை. அவளுக்குக் கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. அதுதான் உடனே புறப்படவேண்டும். அ[illegible]வுமன்றி இரவே வேறு சந்திப்பதாக கூறி இருக்கிறேன்."

"ரொம்ப 'சீரிஸ்' ஒன்றும் இல்லை!"

"கொஞ்ச 'சீரிஸ்'தான். மிகவும் ஜாக்கிரதையாக வேலை செய்ய வேண்டும்"

பாண்டு மிகவும் யோசனை செய்பவனைப் போல கண்களை மூடிக் கொண்டான், பிறகு மெதுவாக முதலியாரை அழைத்து,

"முதலியாரே ஒரு விஷயம்...... நாம் பேசுவது வெளியில் கேட்காதே...! இல்லை யாராகிலும்..?" என்று இழுத்தான்.

"இல்லை. இல்லை. வெளியில் கேட்காது."

ஜமீந்தார் முகத்தில் ஒரு வித களை படர்ந்தது!

"என்னங்க முதலியாரே, நீங்கள் இந்த விஷயத்தில் ஒரு உதவி செய்ய முடியுமா? எனக்கு இந்த ஊரில் யாரும் அவ்வளவாகத் தெரியாது..."

"கட்டாயம்...! கட்டாயம் உதவி செய்வேன். அது எதுவாயிருந்தாலும் சரி. அதிலும் பெண்களுக்கு என்றால் நான் தவறவே மாட்டேன்!"

முதலியாரின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது! மழை வருவதற்கு முன்னே கூடிடும் கருமுகிலைக் கண்ட குயிலின் உள்ளம் போல் துள்ளியது முதலியாரின் நெஞ்சம். அவரையறியாது கை மீசையை வளைத்து வளைத்து விட்டுக் கொண்டிருந்தது! அவர் முகத்தைப் பார்த்தால் எதற்கும் துணிந்து விடுவார் போலிருந்தது!

பாண்டு மெதுவாக ஆரம்பித்தான்,

"நான் கூறப்போகும் விஷயம் நம்ப முடியாது போல் இருக்கும். ஆனால் உண்மை. அந்தப் பெண்ணை அவள் மாமன் ஏறக்குறைய ஒரு கைதியைப் போல் வைத்திருக்கிறான். இப்பொழுது தகராறு என்னவென்றால், அவளுக்கு ஒருவனை மணக்க விருப்பம். ஆனால் அவள் மாமன் 'வேறொருவனைத்தான் மணந்து கொள்ளவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறான்" என்றான்.

"அவள் எப்படி இருப்பாள்....? நல்ல அழகியா...? — ஜமீந்தார் ஆழ்ந்த சிந்தனையுடன் கேட்டார்.

பாண்டு ஒரு புன் முறுவல் பூத்தான்.

"உம்! உலகிலேயே அவள்தான் அழகானவள் என்று வைத்துக் கொள்ளுங்களேன். நான் மேல் நாடுகளிலெல்லாம் சுற்றிவிட்டேன். அவளைப் போன்ற சேல்விழியாளை நான் காணவேயில்லை. அவள் மாம்பழக் கன்னம் ஒன்றைச் சுவைக்கவே ஆயிரம் பொன் கூட கொடுக்கலாம்..." என்றான்.

மிகவும் உற்சாகமுடன் ஜமீந்தார் நாற்காலியை இன்னும் கொஞ்சம் முன்னால் இழுத்துப் போட்டுக் கொண்டார்.

"உம்! ஆகட்டும். மேலே சொல் கேட்போம்" என்றார்

"இப்பொழுது அவள் மாமன் வெளியில் போயிருப்பான். அவன் வர இரவு பத்து மணியாகும். அதற்குள் அவளை அழைத்துக் கொண்டு வெளிக் கிளம்பி விட வேண்டும். அதற்காக இந்தக் 'காரை' ஒருவரிடமிருந்து வாங்கி வந்திருக்கிறேன்," என்றான்.

"அப்போது நான் உங்களை எங்கு' சந்திக்கட்டும்?" முதலியார் மிகவும் பரபரப்புடன் வினவினார்.

"பாருங்கள், அவள் மாமன் வருவதற்குள் வேலை முடிய வேண்டும். எனவே நாம் விறுவிறுப்பாக வேலை செய்யவேண்டும். நான் உங்களை அவர் வீடு வரையிலும் அழைத்துச் செல்கிறேன். உங்கள் வேலை, அவளை உள்ளேயிருந்து அழைத்துக் கொண்டு வர வேண்டியது தான்."

"வேலைக்குக் 'கூலி' தருவாள் இல்லையா...?"

"அது இல்லாமலா...! நான் முதலிலேயே அவ்விடத்தில் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் நேரே போய் அவளை அழையுங்கள். அவள் முதலில் உங்களைத் தெரியாதது போல் நடிப்பாள். ஒருக்கால் அங்கு யாராகிலும் இருந்தால் அவளை அப்படி நடிக்குமாறு நான் தான் கூறியிருக்கிறேன். நீங்கள் அதையெல்லாம் கவனிக்காதீர்கள்! அவள் முதலில் உம்மை வெறுப்பது போல் செய்வாள். அதெல்லாம் வெறும் நடிப்பு! நீங்கள் பேசாமல் வலிய தூக்கிவந்துவிடுங்கள்! என்ன?" என்றான் பாண்டு ரங்கம்.

"ஓ...அதற்கென்ன; நான் தான் முன்னரேகூறினேனே; பெண்கள் —அதிலும் குறிப்பாக நீர் சொன்னது போல, நல்ல அழகுள்ளவர்களுக்கு உதவி செய்ய நான் தயங்கவே மாட்டேன்;" என்று புன்சிரிப்புடன் புகன்றார்.

"நல்லது. நீங்கள் இரவு தயாராய் இருங்கள்.! நானே வீட்டிற்கு வந்து உம்மை அழைத்துச் செல்கிறேன். என்ன......மறந்து விடாதீர்கள். நான் போய்வருகிறேன்." என்று பாண்டு கூறிவிட்டு வெளியில் சென்றான்.

* * * *

கார் வீட்டை நோக்கிப் பறந்தது! பாலகிருஷ்ணன் இவனுக்காக காத்திருந்தான். சென்றவுடன், அவனுடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு சமயலறைக்குச் சென்று மனைவியிடம் ஏதோ கூறினான். பின்னர் உணவருந்திவிட்டு காரை எடுத்துக் கொண்டு ஒரு சுற்று சுற்றினான். மணி ஒன்பது அடித்தது! முதலியார் தயாராக காத்திருந்தார். பாண்டுவும் சரியாக ஒன்பது மணிக்கு அவர் வீட்டையடைந்தான்.

"வாப்பா,பாண்டு கூறிய படியே தான் சரியாக வந்திருக்கிறாய்" என்று மிகவும் பூரிப்புடன் புகன்றார்.

அவர் பூசியிருந்த வாசனைத் தைலம் 'குப்' பென்று பாண்டுவின் மூக்கிற்கு ஏறியது!

"உம்! வாருங்கள். நாம் [illegible]தற்கு நேரம் சரியாக இருக்கும். நான காப்பி கொண்டு வந்திருக்கிறேன். குடிக்கின்றீர்களா?"

"இல்லை. வேண்டாம். நாம் முதலில் அவளை அழைத்து வந்து 'நம் வேலையை' முடித்து விட்டால் அதுவே போதும்" என்றார் முதலியார்.

"உங்கள் கார் தயாராகத்தானே இருக்கிறது......?

"மிஸ்டர் பாண்டு. ஒரு யோசனை. நான் அவளுடைய மாமனுக்கு கார் விபத்தில் காயம் பட்டிருக்கிறது என்று முதலில் கூறி அழைக்கப் போகிறேன், வாரவிட்டால் பிறகு தெரிந்திருக்கிறது......! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்......?

"எக்சலெண்ட்!" இந்த எண்ணம் எனக்குக்கூட தோன்றவில்லையே......!" என்றான் பாண்டு.

முதலியார் ஏதோ ஒரு காரியத்தை சாதித்து விட்டவர்போல் சிரித்தார்.

கார் புறப்பட்டு, வேகமாக ஓடியது. பாண்டு வேண்டுமென்றே ஊரையெல்லாம் சுற்றிவிட்டு இறுதியில் தன் வீட்டின் எதிரிலேயே நிறுத்தினான்.

"இதோ! இங்குதான்! அந்த வீட்டின் முதல்மாடியில்தான் அவள் இருக்கிறாள். 'இன்ஜின் ஓடிக் கொண்டே இருக்கட்டும். நான் இங்கேயே தயாராக இருக்கிறேன். நீங்கள் சீக்கிரம் போய் அழைத்து வாருங்கள். 'குட்லக்' என்றான்."

முதலியார் மின்னல் வேகத்தில் கதவையடைந்தார்; காற்று அங்கிருந்த மர இலைகளின் உள்ளே நுழைந்து கானம் பாடியது! தோட்டத்திலே பூத்துக் குலுங்கிய மலர்களிட மிருந்து தென்றல் கொஞ்சம் நறு மணத்தைப்பெற்று நாலு திசையிலும் பரவச் செய்தது! வானிலே வட்டமிட்டுக் கொண்டிருந்த வெள்ளிக் கதிர் என்ன நடக்குமோ என்று ஏங்கி முகிலுக்குள் மறைந்துகொண்டது!

கோட்டைச் சுவரின் பொந்திலே கோட்டான் ஒளிந்திருப்பதைப் போல, பாலு வீதியில் ஒரு மூலையில் மறைந்து நின்று கொண்டிருந்தான். முதலியார் மேலே சென்றவுடன் இவன் பாண்டுவிடத்தில் ஓடினான்.

* * *

ஒரு வேலைக்காரன் வந்து கதவைத் திறந்தான். முதலியார் உள்ளே

நுழைந்தார். வேலையாள் சந்தேகத்துடன் முதலியாரையே நோக்கிக்கொண்டிருந்தான். உள்ளே நுழைந்தவுடன் கூடத்தில் ஒரு கட்டழகி அமர்ந்திருந்தாள். அவள் மதி நிகர்த்த முகமும், அதிலே மொய்த்திருந்த வண்டைப்போன்ற விழிகளும், குறுநகை பூத்தச் செவ்விதழும், பரந்த நெற்றியும், அதன் இடையிலே திகழ்ந்த திலகமும் முதலியாரை பரவசப் படுத்தின.

"உண்மையிலேயே நல்ல அழகிதான்", முதலியார் மனத்திற்குள்ளேயே கூறிக்கொண்டார்.

"வாருங்கள்.................. யார் வேண்டும்......? என்றாள் அவள்,

"ஒரு நண்பன் எனனை இங்கு அனுப்பினான்!" பொருத்தமில்லாத விடை! ஆனால் கொஞ்சு மொழியில் முதலியார் பேசினார்.

"யார் அந்த நண்பர்? ஏன் அனுப்பினார்.........? எனக்கு உங்களைத் தெரியாதே......! என்றாள் அவள்.

"அந்த பணியாளைக் கொஞ்சம் அப்படிப் போகச் சொன்னால் தான் கொஞ்சம் சகஜமாய் பேச முடியும்" என்றார் ஜமீந்தார்.

அவள் அந்தப் பணியாளைப் பார்த்தவுடன் அவன் சென்று விட்டான்!

"உம். ஆகட்டும், உடனே புறப்படு. இன்னும் ஒரு கணம்கூட தாமதிக்காதே. வெளியில் கார் காத்திருக்கிறது" என்றார் பரபரப்புடன்.

அவள் ஏதோ பயந்து விட்டவளைப் போலே நடித்தாள்,

"என்ன...சாரா? ஒன்றும் புரியவில்லையே! என்னை எங்கு அழைக்கிறீர்? முதலில் நீங்கள் யாரென்றே தெரியவில்லை! ஒருக்கால் தவறாக இந்த வீட்டிற்கு வந்து விட்டீர்களா.........? என்று பேசிக்கொண்டே போனாள்.

"ஐயோ! தயவுசெய்து நீ இன்னும் என்னை சோதிக்காதே, வழியில் யாரும் இல்லை! உனக்கு உயிரளிக்கவே நான் வந்திருக்கிறேன், வருவதற்குள் நாம் வெகு தூரம் சென்று விடலாம்" என்று கூறிக்கொணடேஎழுந்துஅவள் கையைப் பிடித்தார்.

அந்த முரடனின் கரத்தை அந்த சேல்விழியாள் வெடுக்கென்று தள்ளிவிட்டு, தன் மலர்க்கரத்தால் அவன் எதிர் பாராவிதமாக அவனை தூரத்தில் தள்ளிவிட்டாள்

"உன் கை உன்னிடத்திலேயே இருக்கட்டும்!" என்று அவள் கூச்சலிட்டாள்.

அதை முதலியார் கேட்கவில்லை! காமவெறி கண்ணை மறைத்தது!

"நீயாக வரவில்லையென்றால், நானே தூக்கிக்கொண்டு போகிறேன். அப்பொழுது தானாக வருகிறாய்" என்று கூறிக்கொண்டே நெருங்கிச் சென்றார்.

"நான் ஓ......வென்று கத்துவேன். மரியாதையாக வெளியே போய்விடு"

"கத்தேன் பார்க்கலாம்! வெளியில் என் நண்பன் தான் இருக்கிறான்!"

அவள் ஓவென்று கூவினாள்.

உடனே காரில் இருந்த பாண்டு, பாலுவை அழைத்து," பாலு...... பாலு... இதோ உனக்கு அழைப்பு வந்திருக்கிறது! சீக்கிரம் ஓடு! நான் உன்னைப் பிறகு சந்திக்கிறேன்"என்று கூறிவிட்டு காரை ஓட்டிக்கொண்டு சென்றுவிட்டான்.

கலையைக் கண்டவுடன், கால் கொண்ட மட்டிலும் பாயும் ஏறு போல, பாலு இரண்டே எட்டில் அந்த மெத்தை மீதேறி அறையினுள் நுழைந்தான்.

"இங்கு கூச்சல் கேட்டது. வீதியில் சென்று கொண்டிருந்த நான் இங்கு தான் இருக்க வேண்டுமென்று ஓடிவந்தேன்...... இங்கே என்ன நடந்தது முதலியாரே...?" என்றான் பாலு.

முதலியாருக்கு பாலுவைக் கண்டவுடன் புலியைக் கண்டதுபோல் இருந்தது! மிகுந்த கோபத்துடன், "வெளியில் போடா...நீ யார் கேட்க?"என்று சீறினார்.

"போகவேண்டாம்! நில்லுங்கள், நீங்கள் யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்த சமயத்தில் எனக்கு உதவி செய்யவேண்டும்! இவன் என்னைத் துன்புறுத்துகிறான்" என்றாள் அவள்.

"ஏனடி பொய் பேசுகிறாய்...?" —முதலியார் முழுங்கிக்கொண்டே கூறினார்.

அனுவசியமாக, பாலு, முதலியாரைப் பார்த்தான்.

"வாயை மூடடா, மடையா... இங்கு ஏதோ நடந்திருக்கிறது! அந்த நங்கை பாவம் ஏதோ சொல்ல இருக்கிறாள். தடுக்கின்றாயே..." என்றான் கோபத்துடன்.

அதற்குள் அவள் நடந்தவற்றைக் கூற ஆரம்பித்தாள்,

"அவன் இந்த அறைக்குள் வந்தான். என்னை வெளியில் 'வா' வென்றான். நான் மறுத்தேன். பின்னர் என் கையைப் பிடித்து இழுத்தான். நான் கோபத்தால் அவன் கன்னத்தில் அடித்தேன். பிறகு அவன் என்னை வலிய வெளியில் தூக்கிச் செல்ல முயற்சி செய்தான். நான் அதற்காகத் தான் ஓவென்று கூவினேன்" என்றாள் சரசரவென்று!

"இல்லை. இல்லை. அவள் பொய் பேசுகிறாள்......நான் வந்து...... இங்கே......" என்று இழுத்தார் முதலியார்.

"ஓகோ!...இவ்வளவு நடந்துவிட்டதா? அந்த அம்மணி கூறுவதா பொய்? நீ என்னதான் செய்யமாட்டாய்? ஆட்டுக் குட்டிக்கு பரிந்துபேசும் ஓநாய்தான் நீ என்பது என்ன எனக்குத் தெரியாதா? நீ என்னதான் செய்யமாட்டாய்? என் ஆயிரக்கணக்கான பணத்திற்கே நாமம் போட்டாயே? இதோ, பழிதீர்க்கும் படலத்திற்கு நல்ல சந்தர்ப்பம் வாய்ந்திருக்கிறது! நான் உன்னை இனி விடப்போவதில்லை! ஊரார் உன்னைக் கண்டு எள்ளி நகையாடும்படிச் செய்கிறேன் பார்" என்று பாலு உரைத்தான்.

அதற்குள் அந்தக் கிளிமொழியாள், "இதோ நான் போலீசுக்குப் 'போன்' செய்கிறேன்" என்று கூறிக்கொண்டே ஒரு மூலைக்கு ஓடினாள்.

"ஐயோ வேண்டாம்! வேண்டாம்! நான் முழு விஷயத்தையும் கூறிவிடுகின்றேன்" என்று பயத்துடன் முதலியார் பதறினார்.

"சரி கூறட்டும் பார்ப்போம்" என்றாள் அவள். முதலியார் விழித்தார். வார்த்தைகள் வெளிவர மறுத்தன! குரலைச் சற்று சரிப்படுத்திக்கொண்டு ஆரம்பித்தார், "அது இப்படி நடந்தது. உன்னுடைய நண்பன் பாண்டுரங்கம்......"

அதற்குள் அவள், "ஐயோ'! என்ன பாண்டுரங்கமா? எனக்குப் பாண்டுரங்கமே தெரியாதே!' என்றாள்.

அப்பொழுதுதான் முதலியாருக்கு, எதிரில் ஒரு பெரிய குழி

(18-ம் பக்கம் பார்க்க)

வெறிச் செயல் புரிவது வீரர்க்கு அழகா?

அடுக்குமா இச் செயல், ஆட்சியாளர்களே?

விடை அளித்திடுமின்! வாய் திறந்து பேசுமின்!

—*—

ஆளவந்தார்கட்கு, உழைப்பவர் உலகின் அறைகூவல்!

பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சிக் குரல் ஆகிய சென்னை மாகாண தொழிற் சங்க காங்கிரஸ் கீழ்கண்ட அறிக்கையை பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளது :—

26-10-50 மாலை, சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூரில், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், மிருகத்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதை சென்னை மாகாண தொழிற் சங்க காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது,

கூட்டம் கூடும் உரிமையை ஸ்தாபிப்பதற்காக, மக்களின் நியாயமான பிரஜா உரிமையை நிலைநாட்டுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மக்கள் முயற்சி செய்தனர். கூட்டம் கூடும் சாதாரண உரிமையைக்கூட பலாத்காரமாகப் பறிக்க முற்படும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள், பிரஜா உரிமை பற்றி வாய் கிழியப் பேசுகின்றனர்! அதே சமயத்தில், மாகாணம் பூராவிலும் 144 செக்ஷன் தொடர்ந்து ஆட்சி செலுத்திவர அனுமதிக்கும் காங்கிரஸ் ஆட்சியாளர்களும், அவர்களின் அடக்குமுறை இயந்திரங்களும் எவ்வளவு மூர்க்கத்தனமான முறையில் இயங்கி வருகின்றன என்பதை குன்றத்தூரில் நடந்த கொடூர துப்பாக்கிப் பிரயோகம் எடுத்துக்காட்டுகிறது. கடந்த $2\frac{1}{2}$ வருடங்களாக, மக்களின் மீதும், உரிமைகளுக்காகப் போராடும் உழைப்பாளிகள்மீதும் அவர்கள் கட்சிகளின்மீதும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பேயாட்டம் ஆடிவருவதை அறிந்தவர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள முடியும். என்றும் பல்லவி பாடுவதுபோல, சர்க்கார், "மக்கள் கல் வீசினர், அதை அடக்க துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நிர்ப்பந்தம் ஏற்பட்டது" என்று மானங்கெட்ட முறையில் பேசுவதை மாகாண தொழிற்சங்க காங்கிரஸ் வெறுப்புடன் ஆட்சேபிக்கிறது.

சுமார் 3000-க்கு மேற்பட்ட பொதுமக்கள்மீது, தடியடிப் பிரயோகம் நடத்தினது மட்டுமின்றி, காட்டுமிராண்டித்தனமாக 8 தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்து 3 பேருக்கு பலத்த குண்டுக் காயம் ஏற்படுத்தி, 19 பேர்களைக் கைதுசெய்துள்ளனர். இதிலும் வெறி அடங்காமல், ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு, வெளியில் யார் வந்தாலும் அவர்களை அடித்து சித்ரவதை செய்கின்றனர்' மக்களின்மீது இத்தகைய அடக்குமுறையை ஏவிவிட்டு, கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளதைக் கேட்டு செ. மா. தொ. ச, காங்கிரஸ் வெஞ்சினம் கொள்வதோடு, மாகாண தொழிலாளி வர்க்கத்தின் சார்பாக இதைக் கண்டிக்கிறது. இதுபற்றி பகிரங்கவிசாரணைநடத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத்தண்டிப்பதோடு, கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்றும், காயம்பட்டவர்களுக்குத் திறமையான வைத்திய உதவி அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜனநாயக உரிமைகளுக்கும் பிரஜா உரிமைகளுக்காகவும் போராடும் சகல ஜனநாயக வாதிகளையும், ஸ்தாபனங்களையும் இந்தக் கொடுமையைப்பற்றித் தங்கள் ஒன்றுபட்ட கண்டனக் குரலை எழுப்புமாறு, சென்னை மாகாண தொழிற் சங்க காங்கிரஸ் அறைகூவி அழைக்கிறது.

உதவி காரியதரிசி

செ. மா. தொ. ச. காங்கிரஸ்

சிறந்த நூல்கள்

	ரூ.	அ.
நல்ல தீர்ப்பு	0	4
காடும் ஏடும்	0	6
போர் முரசு	0	8
திராவிடர் சமூகநிலை	0	4
தமிழ் வாத்தியார்	0	12
தி[illegible] வி. க. மணிமடல்	1	8
எது சுயமரியாதை	0	8

மாணவர் பதிப்பக வெளியீடுகளான மேற்கண்ட நூல்களின் விற்பனை உரிமையை நாங்கள் பெற்றிருப்பதால் தேவைக்கு எங்கட்கு எழுதுங்கள்.

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு, சென்னை.

போர்வாள்

[திராவிடர் வார வெளியீடு]

வாள் 4	திருவள்ளுவர் ஆண்டு 1981 ஐப்பசி 19 4—11—50 சனிக்கிழமை	வீச்சு 10

வாரீர் மாணவர்களே!

திராவிட மாணவர்களே! வாரீர்! எதிர் காலச் செயல்வீரர்களே, வாரீர்! ஒன்றுபடுவோம். திரண்டு நிற்போம். தெளிவு பெறுவோம், துணிவு கொள்வோம். திராவிடநாடு உருவாகும் வரையில் உற்சாகத்தோடு உழைப்போம்.

திராவிடம் எவரையும் அடிமை கொண்டதில்லை—எவருக்கும் அடிமையானதும் கிடையாது வரலாற்றுச் சுவடிகள் எடுத்துக் காட்டுகின்றன இவ்வுண்மையை.

கால வேறுபாட்டால், நம் மக்களின் கருத்துக் குழப்பத்தால், கற்றவர்களின் மதிமயக்கத்தால், புல்லுருவிகளின் சுயநல வேட்கையால், நம் அரும் திராவிடம் ஆரிய மூடுபனியால் மூடுண்டு கிடப்பதை, வடவர் ஆதிக்கத்தால் வளம் குன்றி வறுமை மிகுந்து வாடிக்கிடப்பதை, கண்டு உணர, ஆராய்ந்து அறிய, அறிந்தவண்ணம் செயல் புரிய, வாரீர், சென்னைக்கு திராவிட மாணவ இளஞ் சிங்கங்காள்.

நம்முயர் திராவிட நாட்டில் என்ன இல்லை? நீர்வளம் இல்லையா? நிலவளம் இல்லையா? மண்ணுக்கடியில் பொன்னில்லையா — இருப்பு இல்லையா — நிலக்கரி இல்லையா? ஓங்கிப் படர்ந்து வளர்ந்துள்ள மரங்களைக் கொண்ட பெரும் பெரும் காடுகள் இல்லையா? இனிக்கும் தீங்கனி பலவகையின தரும் மா பலா சோலைகள் இல்லையா? கோடையின் வெப்பத்தைத் தணித்துக்கொள்ளும் குளிர் குன்றுகளுக்குக் குறைவா?

கடல் அரண் இருக்கிறது. சுற்றிலும் மலைகள் சூழ்ந்து நாட்டைக் காப்புச் செய்து நிற்கின்றன. அனைவருக்கும் புத்தூக்கம் அளிக்கும் தென்றல் இங்குண்டு.

கடலிலே கலம் செலுத்துவோர், மூச்சடக்கி கடலுக்குள் சென்று முத்துக்குளிப்போர், வயலிலே பாடுபடும் உழவர்—உழத்தியர், உழைத்தே உண்ண வேண்டும் என்ற உயர்ந்த கருத்துடையோர் இங்கு, திராவிடத்தில் ஏராளமாக உள்ளனர்.

திராவிடத்தை, இயற்கை வெறும் பாலைவனமாக வைத்திருக்கவில்லை. எல்லா வளமும் இருக்கிறது திராவிடத்தில். வளத்தைப் பெருக்கும் உள்ள உரமும் உடல் வன்மையும் கொண்டோர் தொகை கணக்கில் அடங்கா.

எல்லாம் இருக்கின்றன இருந்தும் திராவிடம் வறுமையில் சிக்கிக் கிடக்கிறது பட்டினியாலும் பஞ்சத்தாலும் மக்கள் தாக்குண்டு தத்தளிக்கிறார்கள். இல்லாமையால் இடர்படுகிறார்கள். கப்பலேறிக் கடல் கடந்து செல்லுகிறார்கள் பசிப் பிணியைப் போக்கிக் கொள்ள அங்கே தன்மானத்தை இழந்து தவிக்கிறார்கள். அவர்கள் கண்ணீரைத் துடைக்கும் நினைப்பு, திறன் எதுவும் அற்றவர்களாக நாம் இருக்கிறோம். இந்தநிலை மாறியாக வேண்டும், இதனை மாற்ற நாம் முனைய வேண்டும். கடல் கடந்த சோக உருவங்களை, நமது மக்கள் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தியாக வேண்டும். அவர்களைத் திரும்பப் பிறந்த நாட்டுக்கு அழைத்தாக வேண்டும். அதற்கான அரும் பணியை நாம் மேற் கொள்ள வேண்டும். அதற்கான அறிவும் ஆற்றலும் நமது மாணவர்களுக்கே உண்டு. எனவே, வாரீர், மாணவர்களே மாநாட்டிற்கு.

வெள்ளையன் வெளியேறினால் சுயாட்சி கிட்டும்; சுயாட்சியும் சுகஆட்சியாக அமையும் என்று அரசியல் அவசரக்காரர்கள் ஆரூடம் கூறினர் அன்று, இதனை மக்கள் நம்பினர், சுயாட்சி பெற துணைபல புரிந்தனர். மக்கள் உழைப்பு வீண் போகவில்லை. பலன் கிடைத்தது. சுயாட்சி கைவல்யமாயிற்று. ஆனால், சுயாட்சி சுகவாட்சியாக மாறவில்லை. சுயநல வேட்டைக்காரர்களின் சது

ரங்கமாகப் போய்விட்டது. பதவிக் கும்பலின் புகலிடமாகப் போய்விட்டது. பணமூட்டைகளின் பாசறையாக மாறிவிட்டது. ஆலை அரசுகளின் ஆரோக்ய ஸ்தலமாகிவிட்டது. அந்த நாள் விடுதலை போர்வீரர்கள், இந்த நாள் பாசீசப் படைவீரர்களாக உருக்கொண்டு வருகிறார்கள்.

ஒரு நாடு அரசியலில் விடுதலை பெறுவது—அதுவும் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபடுவதென்பது. அந்நாட்டில் உள்ள முதலாளித்துவ வளர்ச்சியின் தராதரத்தைப் பொறுத்ததாகும் என்பது அரசியல் அருங்கலை எடுத்துக்கூறும் ஒன்றாகும். ஒரு தேசிய அரசில், ஆலைச் சீமான்களின் ஆதிக்கம் தான் மேலோங்கி இருக்கும் என்பதையும் அரசியல் கலையே அறிவித்துக்கொண்டு இருக்கிறது. இதனை நன்கு உணர்ந்து கொள்ளும் ஆற்றல் எல்லா மக்களுக்கும் இருத்தல் முடியாத காரியம். இந்த உண்மையைத் தெள்ளத்தெளிய உணர்ந்து கொள்ளும் நூல் அறிவும், வரலாற்றுப் புலமையும் முறையாகப் பெற்றிருப்பவர்களும் மாணவர்களே யாவர். எனவே, வாருங்கள், சென்னைமாநாட்டிற்கு, காலம் என்னும் துலாக்கோலில், படிப்பென்னும் படிக்கற்களை ஓர் தட்டில் போட்டு, நாட்டு நிகழ்ச்சிகளை மற்றோர் தட்டில் இட்டு, நிறுத்துப் பார்த்து உண்மை காண.

கேடு களையப்பட வேண்டும், தீமை தொலைக்கப்பட வேண்டும், துன்பம் துடைக்கப்பட வேண்டும், சுரண்டல் அகற்றப்படவேண்டும், மக்களுக்கு நல்வாழ்வு வேண்டும், அதற்கு நல்லாட்சிவேண்டும், அதுவும் மக்களாட்சி முறையில் இலங்க வேண்டும், என்றெல்லாம் எவரும் விரும்புவர். ஆனால், பெரும்பாலோர் விரும்புவதோடு நின்றுவிடுவர். அவ்வளவுதான் அவர்களால் முடியும். விரும்பியதைப் பெற தங்கள் சுண்டுவிரலையும் அசைக்க அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள். அதற்கான துணிவும் அவர்களுக்குக் கிடையாது; வழிவகைகளும் கற்றது கிடையாது.

மாணவர்களோ, அத்தகையவர்கள் அல்லர். புரட்சி வீரர்களின் செயல் முறைகளைக் கற்றவர்கள் மாணவர்கள். தன் பலம் மாற்றான் பலம், இரண்டையும் சீர்தூக்கிச் செயல் புரியும் நுண்ணறிவு வாய்க்கப் பெற்றவர்கள் மாணவர்கள்.

நிலநூல் தெரியும்; உளநூல் தெரியும், மாணவர்களுக்கு. அரசியல் அவர்களுக்குக் கற்கண்டு. பொருளியல் அவர்களுக்குப் புத்தமுது. எல்லாவற்றிற்கும் மேலான தியாகம் அவர்களின் ஜீவன். அவர்களே, மக்களின் வாழ்க்கைத்துறைகள் அனைத்திற்கும் வழிகாட்டிகளாக முன்னின்று தொண்டாற்றக் கடமைப்பட்டிருப்பவர்களாவர். ஆதலால் அழைக்கிறோம், அன்புடன், ஆயிரக்கணக்கில் திரண்டு வாரீர் மாணவமணிகாள் என்று.

நேற்று நாம் கொண்ட அலட்சியப் போக்கால், காட்டிய கவலைக் குறைவால், இன்றைய கேடுகள் நிகழ்ந்துவருகின்றன. இன்று நாட்டில் நடைபெறும் அதிக்கிரமங்களைக் காண மறுத்தோ, கண்டும் காணாதவர்கள் போல் காலம் கழித்தோ, நமக்கென்ன என்று தட்டிக் கழித்தோ, செயலற்றுச் சோம்பி இருந்துவிடுவோமேயானால், இன்றைய சம்பவங்களின் அடியாகப் பிறக்கும் எதிர்காலம் மிக மிகப் பயங்கரமானதாகவும், கொடுமை நிரம்பியதாகவும், விலங்குகுணம் கொண்டதாகவும் இருந்துவிடும் என்பதை, இன்றைய நடைமுறைகளில் இருந்து யூகித்து உணர்ந்துகொள்ளும் நுண்ணறிவு வாய்க்கப்பெற்றவர்கள் மாணவர்களேயாவார். ஆகவே, வாரீர் மாணவர்காள் எதிர்காலத்தை உருவாக்க.

வடநாடு, நாடாகிறது இயற்கைவளம் குறைவாகக் கொண்டிருந்தும்கூட, எல்லா வளமும் இருந்தும்கூட நாடாக இருந்த திராவிடம் நாளுக்கு நாள் காடாகிக்கொண்டு வருகிறது. இதுவும் வேண்டுமென்றே செய்யப்பட்டு வருகிறது. இதனைத் தடுக்க ஒரேஒரு வழி—தனிப்பெருந்தனிவழி உண்டு—அதுதான் தனிநாடு கோரிக்கை—திராவிடநாடு ஏற்பாடு.

இதுபற்றி நன்கு அறிந்துள்ள முன்னாள் அமைச்சர் முத்தையா வருகிறார் ஆணித்தரமாக எடுத்துக்கூற; அஞ்சா நெஞ்சம் படைத்த 'சண்டே அப்சர்வர்' ஆங்கில இதழின் ஆசிரியர் பாலசுப்ரமணியம் கலந்துகொள்ளுகிறார்; பன்மொழிப் புலவர் பேரறிஞர் அப்பாதுரையார் பங்குகொள்ளுகிறார். சென்னை திராவிட முன்னேற்ற மாணவர் கழக மாநாட்டில் திராவிட மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டு, நல்ல திட்டங்களை நாட்டுக்குத் தந்து, திராவிடம் ஏற்பட சேவை பல ஆற்ற, அன்பழைப்பு விடுக்கிறோம் மாணவ இளம் காளைகளுக்கு

அடக்குமுறைப் பலிபீடத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகக் காணிக்கை!

சிறைவாழ்வு பெற்ற சிங்க ஏறுகளின் உணர்ச்சியூட்டும் உயரிய பெயர்கள்!

இதுவரை சிறைப்பட்டோர் தொகை 91

இன்பத் திராவிடத்தை உருவாக்கும் பெரும் பணியைத் தன் இலட்சிய கீதமாகக் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாசறையிலிருந்து, ஆளவந்த "அருங்குணக் குன்று"களின் அளவுக்கு மீறிய அடக்குமுறைத் தாகத்தைத் தணிப்பதற்காக, சிறைக்கோட்டம் நண்ணிய சிங்க ஏறுகளின் பெயர்ப் பட்டியல் இது:—

1. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஆசிரியர், "தனி அரசு"

"காந்தியார் சாந்தியடைய" என்னும் ஏடு தீட்டிய குற்றத்திற்காக இவருக்கு முசிரி கோர்ட்டில், 6 மாதக் கடுங்காவல் தண்டனையும் 500 ரூ. அபராதம்—கட்டத் தவறினால் மேலும் மூன்றுமாத சிறைவாசத் தண்டனையும் விதிக்கப்பட்டது. வழக்கு, அப்பீலில் உள்ளது.

2. கலியபெருமாள்.

மேற்படி நூலை வெளியிட்டது இவர் 'குற்றம்'! தண்டனை, 3 மாத கடுங்காவலும், 500 ரூ. அபராதமும். அபராதம் கட்டத் தவறினால் மேலும் 3 மாதம் தண்டனை.

3. தங்கவேலர்.

அழியட்டுமே திராவிடம் என்ற நூலை எழுதியது இவருடைய 'குற்றம்'. தோழர் கலிய பெருமாளுக்கு அளித்த அதே தண்டனை இவருக்கும்.

4. தி. மு. க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணாதுரை.

'ஆரிய மாயை' ஏடெழுதியதற்காக 6 மாதச் சிறை வாழ்வும் 700 ரூ. அபராதமும் விதிக்கப்பட்டது. 10 நாள் சிறைவாசத்தோடு, நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டார்.

5. எஸ். சுப்ரமணி.
6. பி. மணி.
7. ராஜா.

இவர்கள் மூவரும், 'ஆரிய மாயை', 'காந்தியார் சாந்தியடைய' ஆகிய தடை செய்யப்பட்ட நூல்களை வட சென்னை வட்டாரத்தில் வீதிகளில் விற்ற குற்றத்திற்காக 3 வாரக் கடுங்காவல் தண்டனை பெற்றனர். 3 வாரத் தண்டனையையும் முகமலர்ச்சியுடன் அனுபவித்துவிட்டு வெளியே வந்துவிட்டனர்.

8. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி
9. ஈ. வெ. கி. சம்பத்.
10. கே. கோவிந்தசாமி, செயலாளர், சென்னை மாவட்டத் தி. மு. க.
11. டாக்டர் கணேசன்.
12. ஜலகண்டபுரம் ப. கண்ணன்.
13. போளூர் சுப்ரமண்யம்,
14. முல்லை வடிவேலு.
15. என். வி. நடராசன்.
16. சி. வி. ராஜகோபால், காஞ்சி நகராட்சிக்கழக உறுப்பினர்.
17. ஈழத்தடிகள் பி. ஏ.
18. தில்லை வில்லாளன் B.A. Hons.
19. வி. முனுசாமி, சென்னை நகராட்சிக் கழக உறுப்பினர்.
20. கே. எம். கண்ணபிரான், துணைச் செயலாளர், சென்னை மாவட்டத் தி. மு. க.
21. சுந்தரேசன், காஞ்சிபுரம்.
22. அகரம் டி. வி. சாமி.
23. கே. கே. நீலமேகம், குடந்தை.
24. குறிஞ்சிப்பாடி சாம்பசிவம்

இந்தப் பதினேழு பேரும், அன்பர் ஆச்சாரியாரின் சென்னை வருகைபோது, அவருக்குக் கருப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்தனர் என்ற குற்றம் சாட்டப்பட்டு 151 ஐ. பி. சி. படி சிறை வைக்கப்பட்டு, மறுநாள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

25. மாஸ்டர் என வழங்கும் அநந்தப்பன்.

இவர், ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டினார் என்ற குற்றத்திற்காக ஒரு வாரக் கடுங்காவல் தண்டனை பெற்று, தண்டனையை அனுபவித்துவிட்டு 30-10-50 திங்களன்று விடுதலையானார்.

26. மயிலை கு. வடமலை
27. சதுரங்கப்பட்டினம் ச. ப. அழகரசு
28. வடசென்னை கே. வி. கே. சாமி
29. மயிலை ப. சானகிராமன்
30. ஜார்ஜ்டவுன் பா. தங்கலிங்கம்
31. கோடம்பாக்கம் ப. ஆ. சாந்தமூர்த்தி
32. கிருஷ்ணாம் பேட்டை நா. இராதாகிருட்டினன்
33. சூளை விசுவநாதன்
34. அயன்புரம் இரா. பாலகதிரவன்
35. சூளை. கே. பி. கஜபதி
36. வடசென்னை ரா. து. சாமி
37. புதப்பேட்டை ஜி. கன்னியப்பன்.
38. தென்சென்னை ரா. சம்பந்தம்
39. அயனாவரம் லோகநாதன்
40. ராயபுரம் நா. து. மகாதேவன்
41. மயிலை வ. சுந்தரம்
42. புரசை எம். சிவலிங்கம்
43. கொண்டிதோப்பு டி. ராஜகோபால்
44. ராயபுரம் என். குப்புராஜ்
45. திருவட்டீஸ்வரன் பேட்டை டி. கே. கபாலி
46. ஓட்டேரி எ. ஜி. சம்பந்தம்
47. புரசை டி. கோவிந்தன்
48. ஜார்ஜ்டவுன் ஜி எஸ், சம்பந்தம்
49. கொத்தவால்சாவடி பி. வடிவேலு
50. ,, கே, ஜயராம்
51. ,, கே. ராஜி
52. வண்ணாரப்பேட்டை ஆர். பக்தவச்சலம்
53. மூர்மார்க்கெட் எச். அப்துல் அமீத்கான்
54. ராயபுரம் எஸ். பாலசுப்ரமண்யம்
55. மூர்மார்க்கெட் அ. தர்மலிங்கம்
56. ராயபுரம் எ. ராஜி
57. காஞ்சி கே. டி. எஸ். மணி
58. ,, வி. பரமசிவம்
59. சென்னை ஆர். வாசுதேவன்

எண் 26 முதல் 59 வரை உள்ள இந்த 34 பேரும், ஆச்சாரியார் வருகை போது கருப்புக் கொடி காட்ட இருக்கையில் கைது செய்யப்பட்டு சென்னைச் சிறைச்சாலையில் காவல் வைக்கப் பட்டனர். இவர்கள் வழக்கு நவம்பர் 6-7 தேதிகளில் விசாரணைக்கு வருகிறது.

60 முதல் } ஆச்சாரியார் வருகைபோது காஞ்சியில், கோட்டைப் பகுதியில்.
68 வரை }

கருப்புக்கொடி காட்டிய குற்றத்திற்காக, ஒரு வாரக் கடுங்காவல் விதிக்கப்பட்டனர். இவர்கள் பெயர் கிடைக்கவில்லை.

69. என். வி. நடராசன், ஆசிரியர், "திராவிடன்"
70. பாலசுந்தரம்—குன்றத்தூர்.

குன்றத்தூரில், மக்களின் பேச்சுரிமையைப் பறிக்கும் விதமாக, தி. மு. க. மீது வீசப்பட்டுள்ள 144 தடை உத்தரவை மீறி பொதுக்கூட்டம் நடத்தச் சென்றபோது இவர்கள் இருவரும் 151 ஐ. பி. சி, படி கைது செய்யப்பட்டு, பூந்தமல்லி சப்-ஜெயிலில் வைக்கப்பட்டுள்ளனர்.

71. பச்சையப்பன்.
72. சாமிநாதன்

இவர்கள் இருவருக்கும் குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக மார்பு கால் இவ்விடங்களில் பலமான காயம்—குண்டடி. ஒரு வார காலமாக சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ளனர். இரவும் பகலும் இவர்களைச் சுற்றி போலீஸ் காவல்—ஆஸ்பத்திரியில்! சற்று குணம் கண்டதும் இவர்களை நேரே சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றுவிடும் "அஹிம்சை ஆட்சி"!

73. சி. திராவிடமணி.
74. வரதன்
75. டி. கே. சிவகுமாரன்.
76. என். திருநாவுக்கரசு.
77. வேலாயுதம்.
78. சுப்ரமண்யம்.
79. முனுசாமி.
80. பக்கிரி.
81. தாமோதரன்.
82. சுப்பராயலு
83. முத்து,
84. ராஜவேலு.
85. பாலகிருஷ்ணன்.
86. ஏழுமலை.
87. பாலகிருஷ்ணன்
88. சபாபதி.
89. கண்ணன்.

90. தாங்தோணி.
91. மற்றொரு தோழர் (இவர் பெயர் தெரியவில்லை)

இந்தப் பதினேழு பேர், ஆஸ்பத்திரியில் உள்ள இருவர். ஆக 31 பேர்மீதும், ஐ. பி. சி. 147, 188, 332 ஆகிய மூன்று விதிகளின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரியில உள்ள இருவர் போக, ஏனையோர் அனைவரும் சைதாப்பேட்டை சப் ஜெயிலில் வைக்கப்பட்டுள்ளனர். குன்றத்தூரில், 144ஐ மீற முயன்றது இவர்கள் செய்த குற்றமாம்!!

ஆக, இதுவரை
தி. மு. க. பாசறையிலிருந்து சிறைக்கோட்டம் புகுந்தோர்தம் எண்ணிக்கை

91

இது தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது வீசப்பட்டுள்ள ஏனைய அடக்குமுறைகள்.

அம்பு 144

சீர்காழி, திருவாரூர், அதிராம்பட்டினம், குன்றத்தூர்—இந்த ஊர்களில் தி. மு. க. மீது 144 தடை உத்தரவு வீசப்பட்டுள்ளது.

'ஜாமீன்' பாணம்!

பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் தொடங்க இருக்கின்ற **'திராவிடநாடு'** தினசரிக்கு ரூ 1000 ஜாமீன் கேட்கப் பட்டு, கட்டப்பட்டு விட்டது.

அண்ணா அவர்கள் பல ஆண்டுகளுக்குமுன் ஆற்றிய சொற்பொழிவாகிய **'திராவிடர் நிலை'** புத்தகத்தை வெளியிட்டதற்காக, அதனை வெளியிட்ட சென்னை மெர்க்கண்டைல் அச்சகத்திற்குக் கேட்கப்பட்டு கட்டப்பட்ட ஜாமீன் தொகை ரூ 1000

'கோட்சே கூட்டம்' என்ற தோழர் பிச்சமூர்த்தியின் நூலை வெளியிட்ட குற்றத்திற்காக, வெளியிட்ட அச்சகத்தின் மீது வீசப்பட்ட ஜாமீன் பாணம் ரூ 1000

தடை செய்யப்பட்ட நூல்கள்
சி. என். ஏ. தீட்டிய
அறப்போர் விடுதலைப்போர்

தொடுக்கப்பட்ட வழக்குகள்

இலட்சிய வரலாறு: சி. என். ஏ. தீட்டியது, இதில் வகுப்புத் துவேஷம் இருப்பதாகக் கூறி வழக்குத் தொடுத்தனர் ஆட்சியாளர்கள். இல்லை! இந் நூலில் வகுப்புத் துவேஷக் கருத்துக்கள் கிடையாது என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தது வழக்குமன்றம்.

கருஞ்சட்டை ஒழியவேண்டுமா? புலவர் செல்வராஜ் தீட்டியது. வகுப்புத் துவேஷம் இருப்பதாகக் கூறி வழக்குத் தொடுத்தனர் சர்க்கார். இல்லை என்று கூறி வழக்கைத் தள்ளிவிட்டார் நீதிபதி.

கோட்சே கூட்டம்: தோழர் பிச்சமூர்த்தி தீட்டிய நூல். வகுப்புத் துவேஷம் இருக்கிறதாம் இதிலே! ஆளவந்தார்கள் கூறுகிறார்கள்!! வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

சவுக்கடி: 'கிளர்ச்சி' இதழாசிரியர் எம். எஸ். சிவசாமி தீட்டிய நூல். வழக்கு முதலில் வாபீஸ் வாங்கப்பட்டு மீண்டும் தொடுக்கப்பட்டது. தொடுக்கப்பட்டதும் உயர்நீதிமன்றம் வழக்கைத் தள்ளிவிட்டது. மூன்றும் முறையாக வழக்கைத் தொடுத்துள்ளனர் நாடாள வந்துள்ள "நல்ல தம்பிகள்"!

அழியட்டுமே திராவிடம்: து. வீ. நாராயணன் தீட்டிய நூல். 158 ஏ. செக்ஷன்படி வழக்கு. நூலாசிரியர் இறந்துவிட்ட பிறகு, அவர் இறந்துவிட்டார் என்பது தெரியாமல் அவர்மீதும், பதிப்பாளர் தோழர் தங்கவேலர் மீதும் வழக்கு தொடுக்கப்பட்டு தங்கவேலருக்கு 3 மாதக் கடுங்காவலும் ரூ 500 அபாரதமும் விதிக்கப்பட்டது.

ஆரிய மாயை
காந்தியார் சாந்தியடைய

இந்த இரண்டு நூல்களின்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பு மேலே தரப்பட்டுள்ளது.

தடியடி தர்பார்

சென்னை, குன்றத்தூர் இரண்டு ஊர்களிலும்

துப்பாக்கிப் பிரயோகம்

குன்றத்தூரில்.

படுகாயம்

இரண்டு இடங்களிலும் ஆட்சியாளர்கள் தடியடி தர்பார் நடத்தியதன் காரணமாக படுகாயத்திற்கு ஆளானோர் சுமார் 1000.

அடக்குமுறைப் பட்டியல் முடியவில்லை வளர்கிறது...... வளர்கிறது........ வளர்ந்துகொண்டே இருக்கிறது...'இன்பத் திராவிடம்' உருவாகும் வரை வளரத்தான் செய்யும்.

(14ம் பக்கத் தொடர்ச்சி)

கருப்புக்கொடி அடையாள நிகழ்ச்சியில் எத்தகைய தொடர்பு மற்ற பொதுமக்களும் தடியால் அடித்து விரட்டப்பட்டிருக்கின்றனர்.

அன்று மாலை இராயப்பேட்டையிலும் இதே முறை கையாளப்பட்டிருக்கிறது.

68 பேர் கைது. 34 பேருக்குச் சிறை.

அமைதியாக இருந்த மக்கள் மீது அர்த்தமற்ற முறையில் வீசப்பட்ட இத் தடியடி கண்டு நாங்கள் வியப்புற்றோம். திடுக்கிட்டு விட்டனர் பொதுமக்கள்!

எதற்காக இவ்வளவு கொடிய தடியடி தர்பார்?

கருப்புக்கொடிகாட்டுவது என்ன சட்டத்திற்கு மாறான நிகழ்ச்சியா? இல்லையே!

கருப்புக்கொடி நிகழ்ச்சியால் பலாத்காரம் விளையும் என்றும் கூறமுடியாதே! திவாகர் வருகையின்போது நாங்கள் காட்டிய கருப்புக்கொடி நிகழ்ச்சியின்மூலம் பலாத்காரம் சிறிதுமின்றி எங்களால் கருப்புக்கொடி காட்ட முடியும் என்பதை நிரூபித்திருக்கிறோமே!

பிறகு ஏன் இந்த அடக்குமுறை அம்பு? இதுதான் சுதந்தர ஆட்சியா?

இவ்வளவு நிகழ்ச்சிகளும் 24.10-50 அன்று நடைபெற்றது. 26-10-50 அன்று, காங்கிரஸ் சர்க்கார், எவ்வளவு கடுமையாக முடியுமோ அவ்வளவு கடுமையாக அடக்குமுறையைக் கையாண்டு விட்டனர். அதாவது, துப்பாக்கிப் பிரயோகமே செய்துவிட்டனர். குன்றத்தூர்! பூந்தமல்லிக்கு அருகே உள்ள சிற்றூர்! அங்கேதான் இந்நிகழ்ச்சி!

சென்ற ஒரு மாத காலத்திற்குள், இரண்டாவது தடவையாக, அந்த ஊரில் 144 உத்தரவைப் பிறப்பித்துள்ளனர் ஆட்சியாளர்கள். அந்தத் தடை உத்தரவை மீறி கூட்டம் நடத்தப் போகிறோம் என்பதாக, முன்கூட்டியே, திராவிட முன்னேற்றக் கழகம், பொதுமக்கட்கும் ஆட்சியாளர்கட்கும் தெரிவித்து விட்டது.

தோழர்கள் என். வி. நடராசன், பாலசுந்தரம் ஆகியோர், குன்றத்தூர் பொதுக்கூட்டத்தில் பேசுவதற்காக ஒரு டாக்சியில் போய்க் கொண்டிருந்தனர். வழியிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர். அங்கே திரண்டிருந்த பெருங் கூட்டம் போலீசாரால் கலைக்கப்பட்டது.

குன்றத்தூரில் 10,000 பேருக்கு மேற்பட்ட கூட்டம். அவர்களைப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைக்க முயன்றனர். கூட்டம் மிகப் பெரிதாக இருக்கவே, எளிதில் அதனைக் கலைக்க முடியவில்லை.

போலீசார் திடீரென்று துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். எட்டு முறை சுடப்பட்டது.

மூவருக்குக் காயம். ஒருவருக்கு ஆபத்தான நிலை.

19 பேர் கைது, ஊரடங்கு சட்டம் அமுல்.

நான் கேட்க விரும்புகிறேன்—மனித இரத்தத்தை, இவ்வளவு சாதாரணமாகச் சிந்தப்படுவதற்கு ஏற்ற கேவலமான பொருள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் ஆட்சியாளர்கள்? சாதாரண பிரஜா உரிமையாகிய பேச்சுரிமை இப்படியா பறிக்கப்படுவது?

கற்கள் தங்கள்மீது எறியப்பட்டதென்றும், எனவேதான் தாங்கள், தடியடி துப்பாக்கி இவற்றைக் கையாள நேர்ந்ததென்றும் போலீசார் கூறுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, அது, பலாத்காரப்பாதையைக்கண்ணெடுத்தும் பாராது. யாராவது சில விஷமிகள் கல்லெறிந்திருக்கலாம், ஆனால் எங்கள் கழகத் தோழர்கள் மறந்தும் கல்லெறிந்திருக்க மாட்டார்கள். நிச்சயம். ஒருவேளை, எங்கள் கழகத் தோழர்களில் யாராவது, கல்லெறிந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டால், அவர்கள், உடனே எங்கள் கழகத்தைவிட்டு விலக்கப்படுவார்கள் என்று அனைவர்க்கும் உறுதி கூறுகிறோம்.

நீதி நேர்மை இவற்றில் நம்பிக்கை உடைய ஒவ்வொருவரும், ஆட்சியாளர்களின் இக் கொடுங்கோன்மையை எதிர்த்து தங்கள் ஆட்சேபக் குரலை எழுப்பவேண்டுமென்றும், ஜனநாயகத் தத்துவத்திற்கு இப்போது ஏற்பட்டுள்ள ஆபத்திலிருந்து அதனைக் காப்பாற்ற முன்வரவேண்டுமென்றும் மிகவும் பணிவாக வேண்டிக் கொள்கிறேன்.

சி. என். அண்ணாதுரை
பொதுச் செயலாளர், தி.மு.க.

சென்னை
26—10—50

[ஆங்கில அறிக்கையின் தமிழாக்கம்]

புத்தம் புதிய புத்தகங்கள்

	ரூ.	அ.
வஞ்சகி	0	8
மயானத்தில் முத்தம்	0	8
வரலட்சுமியின் காதல்	0	5
இருண்ட வீடு	0	12
கல்வி நீரோடை	0	6
வாத்தியாரம்மா	0	4
மா•சே•துங்	0	8
அன்பின் உருவம்	1	8
இன்ப நினைவு	1	0
ஆண்—பெண்	1	8
யான்கண்ட இலங்கை (மு.வ)	1	8
லீலா ராணி	0	8
அய்யோ கடவுளே	0	3
சுவாமிகள்	0	4
இதோ கடவுள் களஞ்சியம்	0	4
ஜனநாயகம்	0	8
குறள் காட்டும் தெய்வம்	0	3
ரஷ்யப் பிரச்னை	1	8
அண்ணாவின் புதுமொழிகள்	0	8
பனகல் அரசர்	0	8
மக்கள் கவிஞர்	0	4
பிரளய உலகம்	1	0
உலக மேதைகள்	1	8
பத்துப்பாட்டு உரைநடை	1	8
கலித்தொகை வசனம்	1	8
பரிபாடல் வசனம்	1	0
பதிற்றுப்பத்து வசனம்	1	0
குறுந்தொகை வசனம்	1	4
அகநானூறு வசனம்	1	0

பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு, சென்னை.

நடக்கிறது, நடக்கிறது, இராமராஜ்யம் நடக்கிறது!

நிற்பவர் : தோழர் வி முனிசாமி
(சென்னை நகராட்சிக் கழக உறுப்பினர்)
அமர்ந்திருப்பவர்: டாக்டர் கணேசன்

★

கோரமான தடியடி பெற்றும்
கலங்கா உள்ளம் கொண்டிருக்கும்
தோழியர் செல்லக்கண்ணம்மையார்

சென்னையில், ஆச்சாரியார் வருகைபோது, ஆட்சியாளர்களால் நடத்தப்பட்ட கோரமான தடியடியால் படுகாயத்துக்குள்ளாகிய ஓராயிரவரில், மூவர் மட்டும், மேலே உள்ளனர் தியாகத் தழும்புகளுடன்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்பட்டது. எனவே மத்திய சர்க்கார் மந்திரிகள் இங்கு வருகிறபோதெல்லாம் அவர்கட்குக் கருப்புக்கொடி காட்டி, மத்திய சர்க்காரின் போக்கிலே எங்கட்குள்ள அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வது என்றும் முடிவு செய்தோம்.

இந்த முடிவுகளை எங்கள் பத்திரிகையிலே வெளியிட்டும் இருந்தோம்.

மத்திய சர்க்கார் விளம்பர மந்திரி தோழர் திவாகர் சென்னைக்கு வந்தபோது, அமைதியான முறையில் கருப்புக்கொடி காட்டி எங்கள் அதிருப்தியைக் தெரிவித்துக் கொண்டோம். அந்தக் கருப்புக்கொடி நிகழ்ச்சியால் சிறிதளவு பலாத்காரம்கூட ஏற்படவில்லை. அமைதிக்குறைவு அணுவளவும் விளையவில்லை. அதுபோலவே, மற்றோர் டில்லி அமைச்சராகிய தோழர் சி. இராஜகோபாலாச்சாரியார் சென்னை வந்தபோதும், கருப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்திருந்தோம். தி மு க. உறுப்பினர்கள், ஆச்சாரியாருக்குப் கருப்புக்கொடி காட்ட, 24-10-50 காலை, கோட்டை ரயிலடிக்கருகில், பல்லாயிரக்கணக்கில் குழுமியிருந்தனர். கழக உறுப்பினர்கள் மட்டுமன்றி, கழக அநுதாபிகளும் ஏராளமாக வந்திருந்தனர், கருப்புக்கொடி காட்டுவது, சட்டப்படி, எவருக்கும் உள்ள உரிமை. எனவே, கருப்புக்கொடி காட்ட ... தடையும் இராது ...றே நாங்கள் எண்ணினோம். ...திகாரிகளின் அறிவிப்புகட்கு இணங்கி நடக்கவும் நாங்கள் தயாராகவே இருந்தோம். வந்திருந்த பல்லாயிரவரும் மிக ஒழுங்காக, அமைதியாக இருந்தனர். இந்நிலையில், திடீரென்று. ஒரு காரணமுமின்றி, மக்கள், ஈவுஇரக்கமின்றி போலீசாரால் அடித்து நொறுக்கப்பட்டதோடு, நாலாபுறங்களிலும் விரட்டியடிக்கப்பட்டனர்.

நூற்றுக் கணக்கானவர்கட்குக் காயம்.

பெண்மக்களும்கூடத் தடியால் அடித்து விரட்டப்பட்டிருக்கின்றனர்.

கழக முக்யஸ்தர்கள் பலருக்குப் படுகாயம்.

தோழர்கள் கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி, சென்னை நகராட்சிக் கழக உறுப்பினர் வி. முனுசாமி, காஞ்சிபுரம் நகராட்சிக் கழக உறுப்பினர் கி. வி. ராஜகோபால் ஆகியோருக்கும் நல்ல அடி.

(13-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை :

மிராசுதார் மகள்

காஞ்சி. கல்யாணசுந்தரம்

(30-9-50 தொடர்ச்சி)

வறுமையூர் மிராசுதார் நீலகண்ட முதலியார், தனது மனைவியை இழந்த பிறகு, மகள் விலாசவதியை முன்னிலும் அதிகமாகச் செல்வச் சிறப்புடன் வளர்த்து வந்தார். குழந்தை விலாசவதியின் முகம் வாட்டமுற்றால், மிராசுதாருக்கு வியர்வை கொட்டும் முகத்தில். சிறுமியின் கண்களில் நீர் தளும்பினால், இரத்தத்தைச் சொரியும் மிராசுதாரின் கண்கள். மகள் தலைவலி என்று படுத்தால், தேகம் துரும்பாகும் மிராசுதாருக்கு. அவ்வளவு அன்பு காட்டிப் பாதுகாத்து வந்தார் மிராசுதார், தன் மகள் விலாசவதியை.

தந்தையார் காட்டிய வாஞ்சையின் காரணமாக, தன் தாயின் பிரிவாற்றாமையை விலாசவதி சிறுகச் சிறுக மறந்து வந்தாள். இருந்தாலும் அவளுடைய தாயின் பெரிய புகைப் படத்தைக் காணும் தோறும், பிரிந்த தாயை நினைத்துத் துக்கித்து வந்தாள். இது கண்ட மிராசுதார், தன் மனைவியின் புகைப்படம் மாட்டி இருந்த கூடத்திற்கு விலாசவதி எப்பொழுதும் செல்லா வண்ணம் கூடத்துக்குச் செல்லும் இருவழிகளையும் அடைத்து விட்டார். இது, குழந்தைக்கு இருந்தத் தாயின் ஏக்கத்தைத் தூண்ட உதவிற்றேயன்றி, மிராசுதார் எண்ணியதுபோல் தாயை மறந்துவாழ விலாசவதிக்குத் துணைசெய்யவில்லை.

விலாசவதி, நீங்கா நிழல் போல் தகப்பனாரைப் பற்றிக் கொண்டாள். காலையில் வயல் வெளிக்குச் சென்றால் கூட, தகப்பனாரைச் சிற்சில நாட்களில் விலாசவதி விடாமல் உடன் செல்வது வழக்கம். மகளுக்குத் தகப்பனார் மீது வளர்ந்து வந்த பாசத்தைப் போலவே, வேலைக்காரி வேதத்தின் மகன் திருமாறன் மீதும் நேசம் வளர்ந்து வந்தது. தூங்கும் நேரத்திலும் கூட திருமாறன் பக்கத்தில் இருந்தால்தான், விலாசவதி தூங்குவாள். தூக்கத்திலும்சரி, தூங்கி எழுந்திருக்கும் போதும் சரி, திருமாறன் பெயரை உச்சரிக்கத் தவறமாட்டாள். காலை சிற்றுண்டி உண்ணும்போதும், பகல் உணவின் போதும் திருமாறன் உடன் உண்ண மறுத்தால், அடுப்படிபக்கமே வா: விலாசவதி மறந்து விடுவாள். தனது நீர் வேட்கைத் தணிய வெறும் நீர் அருந்துவதானாலும், ஒப்புக்காவது திருமாறனும் நீர் அருந்துவதுபோல் பாவனைச் செய்தால்தான் விலாசவதி நீர் குடிப்பாள். தனக்கு அணிவிப்பது போலவே திருமாறனுக்கும் தூய்மையான ஆடைகளை அணிவித்தாக வேண்டும். சிறிது அழுக்கான சொக்காயைத் திருமாறன் போட்டுக் கொண்டிருந்தால் கூட, அதனைக் கழற்றி விட்டு வேறு சொக்காய் போடுகிற வரையில் தனது தகப்பனாரையும் வேலைக்காரி வேதம்மாளையும் லேசிலே விடமாட்டாள் விலாசவதி. சில சந்தர்ப்பங்களில், இது விஷயத்தில் விலாசவதியின் பிடிவாதம் வெற்றி பெறாமலும் போய் விடுவதுண்டு. அக்காலங்களில் தனது 'கௌன்' சொக்காயைத் திருமாறன் போட்டுக் கொண்டு ஆகவேண்டும் என்று அடம்பிடிப்பாள் சிறுமி. பெண்ணுடையை அணிந்துக் கொள்வதற்குத் திருமாறனுக்கு விருப்பமில்லாமல் இருந்தாலும் கூட, விலாசவதியின் அன்புக்குக் கட்டுப்பட்டு, மறுத்துக் கூறாமல் அவள் 'கௌனை' மாட்டிக் கொள்வான். தகப்பனார்மீது விலாசவதிக்கு இருந்த அன்பு அதிகமா திருமாறன் மீது கொண்டிருந்த பாசம் அதிகமா என்று திட்ட வட்டமாகக்கூற முடிவதில்லை. இருந்தாலும் திருமாறன் விஷயத்தில் விலாசவதி நடந்து கொண்ட முறையைப் பார்க்கின்ற பொழுது, தகப்பனாரை நேசிப்பதைக் காட்டிலும் ஓர் அளவிற்குக் கூடுதலாகத் திருமாறனை நேசித்தாள் விலாசவதி என்று சொல்லுவது குற்றமுடையதாகாது.

தனது மகன் திருமாறன் மீது விலாசவதி கொண்டிருந்த பற்றின் காரணமாக, விலாசவதி வேலைக்காரி வேதம்மாளுக்கு மட்டற்ற அன்பு வளர்ந்துவர ஆரம்பித்தது. விலாசவதியையும் தான் பெற்றெடுத்த மகளாகவே மதித்தது நடக்கத் தொடங்கினாள். தனது மகனை திருமாறனையாவது ஏதாவது கடுகடுத்துக் கூறுவானே

யன்றி, விலாசவதியை அதட்டியும் கூட அழைக்கமாட்டாள்.

திருமாறனும், விலாசவதியும் இருக்கும் நிலைகண்டு மிராசுதாருக்கு உள்ளூரக் கோபம் தான். ஒரு செல்வச் சீமானின் மகளாகப் பிறந்து, சிறப்புடன் வளர்க்கப்படும் ஒருத்தி, ஒரு வேலைக்காரியின் பிள்ளையோடு அன்பாக நடந்து கொள்வது என்றால் பணத்திமிர் பிடித்த எவருக்கும் அருவருப்பைத் தானே உண்டாக்கும். மிராசுதார் நீலகண்ட முதலியாரும் அந்த இரகத்தைச் சேர்ந்தவர் தானே? அவருக்கு மட்டும் கோபம் இல்லாமல் இருக்குமா தனது மகளின் போக்கில்? இருந்தாலும் அதை மிராசுதாரால் வெளியில் காட்டிக் கொள்ள முடிவதில்லை. திருமாறனைக் கண்டஉடன், கழுத்தைப் பிடித்துத்திருகி எறிந்து விடலாமா என்று நினைப்பார், மிராசுதார், சில சமயங்களில். சிறுவனின் கைகால்களை முறித்து விட்டால்தான் என்ன என்று கூட யோசிப்பார். உணவிலே ஏதாவது விஷத்தைக் கலந்து கொடுத்துக் கொன்று விட்டால்தான் என்ன என்று கூட நினைப்பதுண்டு மிராசுதார். இவ்வளவு கொடிய எண்ணங்களையும் மிராசுதார் நடைமுறைக்குக் கொண்டுவர சக்தியற்றவராக இருந்தார். கடுகடுத்துப் பார்த்தால்கூட, அதனை, திருமாறன், விலாசவதியிடம் கூறிவிடுவான். விலாசவதி அழத் தொடங்கி விடுவாள். அதன் பிறகு அவளை ஒயப் பண்ணுவது என்பது மிராசுதாரால் அவ்வளவு சுலபத்தில் நடக்கக் கூடிய காரியமன்று. இந்த ஒன்றுக்காகவே மிராசுதார், திருமாறன்மேல், தான் கொண்டிருந்த பகையைத் தனது விருப்பப்படி, நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் நெடுமாறன் மீது, மிராசுதார் நீலகண்ட முதலியார் உள்ளத்தில் உருவான பகை உணர்ச்சி நீறுபூத்தநெருப்புப்போல் அணையாமல், வாய்ப்பை எதிர் நோக்கிக் கிடந்தது வெளிக்கிளம்ப.

இப்படியே இரண்டாண்டு ஓடி மறைந்தது. விலாசவதிக்குக் கல்வி போதிக்க வேண்டிய காலமும் வந்துவிட்டது. வறுமையூரிலோ திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கும் ஏற்பாடு கிடையாது. அக் கிராமத்துக்கு ஒரு மைல் தொலைவிலுள்ள பிரம்ம நகரில்தான் தொடக்கக் கல்விக்கூடம் ஒன்று இருக்கிறது. அதுவும் ஒரு சிறியகுக்கிராமந்தான். அங்குக் குடியாக இருப்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பத்தினர் பார்ப்பனர்கள். பிரம்மபுரியைவிட வறுமையூர் பெரிய கிராமமாக இருந்தும்கூட, வறுமையூரில் ஒரு சிறு பள்ளிக்கூடமும் இல்லாதிருக்கும்பொழுது, சிறிய குக்கிராமமான பிரம்மபுரியில் மட்டும் ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது என்பது ஆச்சரியத்தைத் தரக்கூடியதுதான்.

பார்ப்பனர்கள் பெருவாரியாக இருக்கின்ற இடத்தில் ஒரு சிறு பள்ளிக்கூடமாவது இல்லாதிருக்க முடியுமா? கல்வியின் சிறப்பையும் முக்கியத்தையும் தெரிந்தவர்கள் அன்றோ பார்ப்பனர்கள்? மற்ற வகுப்பினர்களைத்தான் கற்கக் கூடாது என்று கற்பித்திருக்கின்றார்களே ஒழிய, தங்கள் இனம் கற்பதற்குத் தடையொன்றும் ஏற்படுத்திக்கொண்டது கிடையாதே? கற்பதும், தம்மின மக்களுக்குக் கற்பிப்பதும் அன்றோ, தங்கள் இனத்தின் கடமைகளில் ஒன்றாக ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்? பார்ப்பனர்கள் பெருத்திருந்த பிரம்மபுரியில் பள்ளிக்கூடம் இருந்ததற்கும், அவர்கள் மருந்துக்கும் இல்லாத வறுமையூரில் பள்ளிக்கூடம் இல்லாமல் போனதற்கும், இந்த உண்மையே அடிப்படைக் காரணமாகும்.

பிரம்மபுரியில் இருந்த தொடக்கப்பள்ளி, மாவட்ட ஆட்சி மன்றத்தைச் சேர்ந்ததாகும். அக்கிரகாரத்தின் மத்தியில் இருந்த ஒரு கட்டிடத்தில் அப் பள்ளிக்கூடம் நடைபெற்று வந்தது பள்ளிக்கூடத்தில் ஜாதி வித்தியாசம் பாராட்டப்படாமல் எல்லாக் குழந்தைகளும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்ற சர்க்கார் உத்திரவு இருந்த போதிலும்கூட, பிரம்மபுரி பள்ளிக்கூடத்தில் ஜாதி வேற்றுமையை முதன்மையாகக்கொண்டுதான் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. அக்கிரகாரத்தின் மத்தியில் பள்ளிக்கூடம் இருந்த காரணத்தால், தீண்டப்படாதோர் என்று அழைக்கப்படும், அருபொருளாகப் படிக்கவரும் ஒன்றிரண்டு ஆதித்திராவிடக் குழந்தைகளுக்கும் அங்கு இடம் கிடைப்பது கிடையாது. வேறு ஜாதிக் குழந்தைகளும் அங்கு படிக்கும் குழந்தைகளில் அதிகமாக இருப்பதில்லை. மற்றவர்களும் கல்வி பெற்றுவிட்டால் எங்கே தங்கள் ஆதிக்கத்திற்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்தால், தீய நோக்கத்தோடு, முன்னேற்பாடாகப், 'படிப்புவராத இனம்' என்ற இழி சொல்லை — தாழ்வுணர்ச்சியை, மற்ற வகுப்பார் நம்பும்படி பார்ப்பனர்செய்துவைத்துக் கொண்டு இருப்பதால், பார்ப்பனர் நீங்கலாக வேறு வகுப்பிலுள்ள பெரியவர்கள், தங்கள்

குழந்தைகளும் கற்றுகவேண்டுமே என்ற கருத்தே கொள்வது கிடையாது. காலமாறு பாட்டால், 'படிப்பு வராத இனத்தைச்' சேர்ந்தவர்கள், துணிந்து, தங்கள் சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்பினாலும், அவர்களும் கல்வி கற்பதில் முதன்மையாக இருப்பது கிடையாது. இதற்கென்ன காரணம்? அப்பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் மூவரில் இருவர் பார்ப்பனர், மற்றொருவர் பார்ப்பனரல்லாத வைதீகக் குடுக்கை. மற்ற வகுப்புக் குழந்தைகளைப் பார்க்கும் பொழுதே, முகத்தைச் சுளித்துக் கொள்வார்கள் இரு பார்ப்பன ஆசிரியர்களும். கடுகடுத்துக் கேவலமாகப் பேசுவார்கள். சிற்சில சமயங்களில் பிரப்பம்பழமும் கொடுப்பார்கள் அப்பிள்ளைகளுக்கு.

ஜாதித்திமிர் பிடித்த பார்ப்பனரல்லாத ஆசிரியரோ, பார்ப்பனரல்லாதார் குழந்தைகளிடம், பார்ப்பன ஆசிரியர்களைவிட கொஞ்சம் கூடுதலாக அட்டகாசம் செய்வார்—அதட்டி மிரட்டுவார். ஓரோர் சமயங்களில் அவருக்குக்கூடத் தன்மான உணர்ச்சி தோன்றுவதுண்டு இருந்தாலும், அதை, வெளிக்குக் காட்டிக் கொள்ள மாட்டார், எங்கே தன் வேலைக்கே உலை வைத்து விடுகிறார்களோ, அந்த இரு பார்ப்பன ஆசிரியர்களும் என்ற பயத்தால்.

பிரம்மபுரி தொடக்கப் பள்ளி எல்லாவகையிலும், ஆதிக்க வகுப்பின் தனிப்பெரும் நிறுவனமாகவே இருந்து விட்டது, அந்தப் பள்ளியில்தான் மிராசுதார் நீலகண்ட முதலியாரும் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். அந்தப்பள்ளிக்கூடத்திலேயே, தனது மகள் விலாசவதியையும் எழுத்தறிவுபெற சேர்ப்பது என்ற முடிவிற்கு வந்தார் மிராசுதார், கணக்குப் பிள்ளை ஏகாம்பர அய்யா அரிய யோசனைப்படி. இந்த முடிவிற்கு வந்ததற்கும் வேறோர் காரணம் உண்டு. அதாவது, வேலைக்காரியின் மகன் நெடுமாறனை விட்டு விலாசவதியைப் பிரித்து வைப்பதும் இந்த ஏற்பாட்டால் நிறைவேறுகிறது. எனவே மிராசுதாருக்கு இரட்டிப்புச் சந்தோஷம்.

கணக்குப்பிள்ளை ஏகாம்பர அய்யருக்கு, விலாசவதியை, தனது பிறப்பிடமான பிரம்மபுரி பள்ளிக்கூடத்தில் சேர்ப்பிப்பதற்கான நோக்கம், வேறு. தனது சிறிய மகனை பதஞ்சலியின் எதிர்காலத்தை நினைத்தே, அந்த யோசனையை அவர் கூறினார். ஏறத்தாழ பதஞ்சலியின் வயதும் விலாசவதியின் வயதும் ஒன்றேயாகும். விலாசவதியுடன் தனது சிறுவனையும் இளமையிலேயே சேர்ந்துப் பழக விட்டுவிட்டால், அவர்கள் என்றென்றும் பிரியாமல் இருப்பதோடு, பதஞ்சலியின் எதிர்கால நலத்துக்கும் விலாசவதி துணை செய்வாள் என்பது ஒன்று; பதஞ்சலியின் உயர்தரக் கல்விக்கு மிராசுதாரின் பணச் சலுகை கிடைக்க வழி பிறக்கும் என்பது மற்றொன்று; தன்னைப்போலவே விலாசவதியின் வீட்டில் ஆதிக்கம் செலுத்தப் பிற்காலத்தில் பதஞ்சலிக்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்பது இன்னொன்று.

நல்ல முகூர்த்த நாளாகப் பார்த்து, மிக ஆடம்பரத்துடன் விலாசவதி, பிரம்மபுரி பள்ளியில் சேர்க்கப்பட்டாள். தினம் தினம் காலையில் பள்ளிக்கு வண்டியில் செல்வாள் விலாசவதி. பகல் உணவு, ஆரம்பத்தில் சிலநாள் வேலைக்காரி வேதம் மாளால் எடுத்துச் செல்லப் பட்டு அளிக்கப்பட்டது. சில நாள் சென்றபிறகு, பிரம்மபுரியில் உள்ள ஏகாம்பர அய்யரின் வீட்டிலேயே பகல் உணவு, விலாசவதிக்கு இடப்பட்டது.

முதல் முதலாக நெடுமாறனைப் பிரிந்து, தான் மட்டும் படிப்பதையும், பள்ளிக்குச் செல்வதையும் விலாசவதி வெறுத்தாள். நாள் செல்லச் செல்ல இத்துறையில் விலாசவதி மாற்றம் பெற்றாள். இந்நிலையிலும் நெடுமாறனை நேசிப்பதில் விலாசவதி ஒரு துளியும் குறைத்துக்கொள்ளவில்லை நாள்தோறும் பள்ளியில் தனக்குப் போதிக்கப்பட்ட பாடங்களை, நெடுமாறனிடம் விவரமாகக் கூறுவாள். தான் கற்ற எழுத்துக்களை நெடுமாறனுக்கு எழுதிக்காட்டுவாள். அதேபோல் நெடுமாறனையும் எழுதச் சொல்லித் தூண்டுவாள். சிறுவனும் அதேபோல் எழுதிக் காட்டுவான். அதிகம் கூறுவானேன்? நெடுமாறனுக்குக் கல்வி கற்றுத் தரும் பேராசிரியையாகவும் ஆனாள் விலாசவதி. பள்ளியில் சேராமலே நெடுமாறனும், தன் வயதுக்கேற்ப எண்ணிலும் எழுத்திலும் வல்லவனான்.

கணக்குப்பிள்ளை ஏகாம்பர அய்யர் எண்ணப்படியே, விலாசவதியிடம், பள்ளித் தோழனாக பதஞ்சலியும் நெருங்கிப் பழகினான். இருவரிடையேயும் நெருக்கம் இருந்ததே யொழிய, நெடுமாறனுக்கும் விலாசவதிக்கும் இடையில் வளர்ந்து வந்தது போன்ற அன்பு வளரவில்லை.

(தொடரும்)

சென்னை மாகாண

திராவிட மாணவர் முன்னேற்றக்கழக,

முதல் மாநாடு

சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில்

8-11-50 புதன் காலை 8 மணிக்கு

தலைவர்:—தோழர் இரா. சத்தியேந்திரன் B.A., B.L.,
திறப்பாளர் :—அறிஞர் C. N. அண்ணாதுரை M. A.
வரவேற்புத் தலைவர்:—தோழர் K.A. மதியழகன் B.A.

பல அறிஞர் பெருமக்களும், மாகாணமெங்குமுள்ள கல்லூரி உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

திராவிட மாணவ, மாணவிகளே! திரண்டு வருக.

V. கண்ணன்	T. பாண்டியன்,	K. ராம மூர்த்தி
மயிலை. பா. சீனுவாசன்	பொருளாளர்.	T. K. பொன்னுவேலு
(உயர்நிலைப்பள்ளிச் செயலாளர்கள்)		(கல்லூரிச் செயலாளர்கள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டியிருந்தது தெரிந்தது. நங்கைகளின் கூந்தலிலே நறுமணம் பரப்பும் மல்லிகை மலரின் கொடியினருகேதான் நாகம் வாசம் செய்யும் என்று அவர் மறந்து போனூர். கண்ணையும் கருத்தையும் கவரும் ரோஜாவிடத்திலே முள் நிறைய இருக்கும் என்பது அவர் சிந்தனைக்கு வரவில்லை! பாவம்.

அவர் ஆச்சர்யத்துடன் கேட்டார், "உண்மையில் உனக்கு பாண்டுரங்கமே தெரியாதா?" என்றூர்.

"இல்லவே இல்லை..."—அவள் தலையை அசைத்தாள். "ஆனூ...ல்..!"

"ஆனூல், கீனூல் இல்லை. நீ திருடன். விஷயத்தை மறைக்க ஏதேதோ உளறுகிருய். டெலிபோன் இருக்கிறது போலீசை அழைக்க ஜாக்கிரதை!" என்றுன் பாலு விறுவிறுப்பாக.

முதலியாருக்கு வையமே இருண்டுவிட்டதைப் போல் இருந்தது. தேன் என்று நினைத்தார் பாண்டுரங்கத்தை. ஆனூல் அவன் தேள் என்று இப்பொழுதுதான் தெரிந்தது!

"வேண்டாம், பொறு, கூறுகிறேன். தயவுசெய்து இரு. நான் உனக்கு எது வேண்டுமானுலும் செய்கிறேன். ஆனூல் போலீசை மட்டும் அழைக்காதே. ஐயோ... ஊரில் எனக்கு உள்ள நல்லபெயர் ...என் மானம்...என் மரியாதை... என் அந்தஸ்து...எல்லாவற்றையும் அழித்துவிடுவாய்..."

"பின் என்ன செய்யட்டும்...?"

முதலியார் பெரு மூச்சுவிட்டார். பின்னர் மெதுவாக, "நீ என்னுடன் இந்த விஷயத்தில் ஒத்து வந்தால் நான் உன் பத்திரத்தை திருப்பியளித்து விடுகிறேன்" என்றூர்.

"அது மட்டுமா...?" பாலு கேட்டான்.

"பின் இன்னும் என்ன வேண்டும்..."

"அந்தக் கடன்...!"

"வேண்டுமானுல் அதைக்கூட மறந்துவிடுகிறேன். உன் பணத்தையும் திருப்பி யளித்துவிடுகிறேன்"

சரியென்று தலையை யசைத்தான் பாலு. 'டேக்ஸி' பறந்தது ஜமீந்தார் வீட்டிற்கு! பத்திரம் திருப்பியளிக்கப்பட்டது. பணமும் வந்துவிட்டது! கொடுக்கவேண்டிய கடனைப் பெற்றுக்கொண்டதாக வேறு பத்திரம் தீட்டி யளிக்கப்பட்டது! கொஞ்ச நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர்

பின்னர் மெதுவாக முதலியார் கேட்டார். "அப்பொழுது அந்தப் பெண்ணின் கதி என்ன ஆவது. எவனே என்னை ஏமாற்றிவிட்டான் பாரப்பா..." என்றூர்.

"உம். உங்களுக்கு இது பழக்கப்பட்ட தொழில்தானே? இத்தனை நாட்கள் நீங்கள் ஏமாற்றினீர்கள். இன்று உங்களை ஒருவன் ஏமாற்றியிருக்கிறுன். அது இருக்கட்டும். கடைசியில் அடிபட்டவள் அந்தப் பெண்தான். இப்பொழுது அவளுக்கு என்ன செய்யப்போகிறீர்கள்?"

முதலியார் பாலுவின் முகத்தை பரிதாபத்துடன் பார்த்தார். அவன் "அதற்கென்ன பணம் சரிப்படுத்திவிடும்" என்றுன்.

"அதற்கு எவ்வளவு வேண்டும்......?" தயக்கத்துடன் கேட்டார்.

"ரூபாய் ஐயாயிரம் கொடுத்தால் தான் அவளை சரிப்படுத்த முடியும் விஷயம் வெளிக்கிளம்பாது." என்றுன் பாலு,

முதலியார் மீண்டும் ஒரு பெரு மூச்சு விட்டார். பின்னர் அதற்கும் ஒரு 'செக்' எழுதிக் கொடுத்தார்.

அரை மணி நேரத்திற்குப் பிறகு பாலு, பாண்டு, 'அந்த அழகி' மூவரும் சிரித்துக்கொண்டே அந்த பாண்டுகளையும் ஒரு செக்கையும் பார்த்துக் கொண்டேயிருந்தனர்.

மிகவும் மோசம் ஒன்றுமில்லை. அவர் காட்டுப் பட்டிக்கே பெரிய ஜமீந்தார். அவருக்கும் நஷ்டம் இல்லை! பாலு துன்பப் பட்டுக் கொண்டிருந்தான். கடன் தொல்லையால். அவனுக்கும் 'கடன் தீர்ந்தது' போன பணமும் வந்துவிட்டது! நாமும் ஒரே இரவில் ரூ. 5000 சம்பாதித்துவிட்டோம்! என்ன லீலா! என்று கூறிக்கொண்டே தன் மனைவியின் முதுகில் பாண்டு தட்டினுன். அவளும் சிரித்தாள்.

மனைவியைப் பணயம் வைத்தே பந்தயத்தில் வெற்றி கண்ட பாண்டுவின் திறமையைப் பார்த்து பாலு பூரித்துப் போய் இடியைப் போல் நகைத்தான். மூவரும் சிரித்தனர்.

கேட்டது பேச்சுரிமை! கிடைத்தது துப்பாக்கிக் குண்டு!

அறநெறியினின்று வழுவினர் ஆட்சியாளர்கள்!

சென்னை மாவட்டச் செயலாளர் கோவிந்தசாமி அறிக்கை

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஓர் சமூக சீர்திருத்த இயக்கம். சமூகத்திலே இருக்கின்ற குற்றம் குறைபாடுகள், சமூகத்தைப் பறிக்கின்ற அரசியல் பொருளாதார சீர்கேடுகள் இவைகளை மக்களுக்கும், மக்களை ஆளுகின்ற குழுவினருக்கும் எடுத்து விளக்கி, திருத்தம் காணுவதற்கும், சமூகத்தின் வாழ்வு செம்மையுறச் செய்யவுமே நாட்டிலே பணியாற்றி வருகின்றது. நாகரீக நாடுகளில் இத்தகைய சீர்திருத்த இயக்கங்களை, ஆளுகின்ற கட்சியாரும், அதற்கு எதிர்க் கட்சியாரும் பேணிவளர்த்து வருவதோடு, சலுகைகள் பல தந்து நன்கு மதித்தும் வருகின்றனர். சீர்கேடே உருவாயமைந்த நாடாகவே இந் நாடு விளங்குவதால்; சீர்திருத்தத்திற்கு இந் நாட்டில் இடமே இல்லை. பட்டவர்த்தனமாக நாட்டின் குறைபாடுகளை எடுத்து சொன்னால் அவர்கள் தேசத்துரோகிகள் என சித்தரிக்கப் படுகின்றனர்.

ஆளுகின்ற கட்சிக்குப் பலம் பொருந்திய எதிர்க்கட்சி இல்லாத காரணத்தினால் நாட்டிலே நன் மதிப்பும் மக்களுடைய பேராதரவும் நாளுக்கு நாள் பெற்று வருகின்ற சமூகசீர்திருத்த இயக்கமாகிய திராவிட முன்னேற்றக் கழகம் ஒருக்கால் தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொண்டு திடீரென நாட்டின் ஆட்சியையும் கைப்பற்றிக் கொள்ளுமோ என்ற அச்சமும், சபலமும் இன்றைய ஆட்சியாளருக்கு ஏற்பட்டு விட்ட காரணத்தால், இக் கழகம் ஒவ்வொரு திராவிடனது உள்ளத்திலும் குடி கொண்டுவிட்டது என்பதை அவர்கள் உணரவில்லை.

சமுதாய பழக்க வழக்கத்திலும், கலாச்சாரத்திலும், மொழியிலும் மாறுபட்ட வடவருடைய நட்பை இக் கழகத்தார் புறக்கணிக்கவில்லை. அவர்களுடைய ஆதிக்கம் இந் நாட்டை வறுமைக்குள்ளாக்குகின்றது என்ற ஒரே காரணத்திற்காகத் திராவிடம் தனியே பிரிந்திரவேண்டும் என்றுதான் சொல்லுகின்றது.

பலாத்காரத்தில் நம்பிக்கையில்லா இக்கழகம் -இரகசியமுடிவுகளையும், சதிச் செயல்களையும் கண்டறியா இக் கழகம் தனது குறிக்கோளில் வெற்றியைக் காணுவதற்கு அமைதியான முறையிலே, சட்டசம்பந்தமான போராட்டங்களையே நடத்தி வந்துள்ளது.

இன்று வரை இவ் இயக்கம் ஒரு தனி மனிதனுக்குக் கூட ஆபத்து உண்டாக்கியதில்லை என்பதை உலகமே சாட்சி சொல்லும். இக் கழகத்தின் பொறுப்பும், கண்ணியமும் இவ்வாறிருக்க, சென்ற 24-ந் தேதி மத்திய சர்க்கார் மந்திரி -கனம் ஆச்சாரியார் சென்னை வந்துற்றதால், வடநாட்டு ஆதிக்க ஆட்சியை இந்நாட்டு மக்கள் விரும்பவில்லை என்று தெரிவிக்கின்ற அறிகுறியாக சட்டரீதியாக, நாகரீகநாடுகளிலே நடப்பதைப் போன்று கருப்புக் கொடிகளைக் காட்டவந்த திராவிடப் பெருங்குடி மக்களை இந்நாட்டு ஆட்சியாளர் தடியால் அடித்துக்கொடுமைகள்பலசெய்து, மண்ணிலே குருதியைக் கொட்டச் செய்திருக்கின்றனர். இது நீதியா? தர்மமா? மனித உள்ளம் படைத்த மந்திரிமார்களே, நாங்கள் உங்களுக்கிழைத்த கொடுமைகள் தான் என்ன?

குன்றத்தூரிலே 26-ந் தேதி பேச்சுரிமைக்காகத்தானே வாதாடினார்கள். இக் கழகத்தார் அச் சிற்றூரிலே பேசிவிட்டால் என்ன பிரளயமா வந்துவிடும்? வாய்ப் பூட்டுச் சட்டம் ஏன்! ஊரடங்குச் சட்டம் ஏன்? நூற்றுக்கணக்கான தமிழன்பர்களை ஏன் தடிகொண்டு தாக்கினீர்கள்? காட்டிலே மேயும் வேட்டைப் புருக்கள் என்று கருதியா? மூன்று தன்மானத் திராவிடர்களை ஏன் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கச் செய்தீர்கள்? இம் முறை வேண்டாம்; இனி வேண்டவே வேண்டாம்.

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களே, திராவிடப் பெருங்குடி மக்களே, பதற வேண்டாம். பொறுமை வேண்டும். சகிப்புத் தன்மை வேண்டும். அன்பைக் கொண்டு ஆயுதத்தை வென்றுவிட முடியும். கட்டுப்பாடும், உள்ளத்திலே உறுதியும் வேண்டும்.

வெற்றி நமதே. வணக்கம்.

கே. கோவிந்தசாமி

சென்னை 4-வது வட்டம் தி. மு. கழகம்

5-11-50 காலை 10-மணிக்கு, இக் கழக உறுப்பினர் கூட்டம், சோலையப்பன் தெரு 112 எண்ணுள்ள கழக இல்லத்தில் புத்தாண்டு நிர்வாகிகள் தேர்தலை முன்னிட்டு நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது வரவேண்டுகிறேன்.

ஆர். பாண்டியன்,
செயலாளர்.

ஒரு திருத்தம்

சென்ற இதழில், ஆச்சாரியார் வருகைபோது, தடியடிபட்டோர் பெயர்களைக் குறிப்பிடுவதில், தோழர் சி. வி. ராஜன் அவர்களை சென்னை மாவட்ட தி. மு. க. பொருள் உறுப்பினர் என்றுள்ளது. அது தவறு அவர் அக் கழகத்தின் விளம்பர உறுப்பினர்.

டில்லி அமைச்சர் காட்கில்

சென்னை வருகிறார் 4-11-50 அன்று

திராவிடத் தோழர்களே!
தோழியர்களே!
திரள் திரளாக வாருங்கள்!

கருங்கொடியை
ஏந்திய வண்ணம்,
கூட்டம் கூட்டமாக வாருங்கள்!

டில்லி ஆதிக்கத்திற்குத் தலைகுனியாது திராவிடநாடு என்பதை விளக்க,

ஆண்ட பரம்பரையினர் நாங்கள்—ஆளடிமைகளாக இனியும் இரோம் என்பதை முழக்க,

தென்னாட்டை, வடநாட்டின் வேட்டைக் காடாக இருக்க இனியும் விடோம் என்பதை ஒலிக்க,

ஆயிரமாயிரமாகத் திரண்டு வாருங்கள்!

கருப்புக் கொடி காட்ட வாருங்கள்!

சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில் உள்ள மெமோரியல் மண்டபம்

4—11—50 சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணி

நினைவிருக்கட்டும், காட்கில் வருகிறார்!

காட்கில்—டில்லி தர்பாரில், சுரங்க மந்திரி!

கருப்புக் கொடி காட்ட வாருங்கள்!

கோவில்பட்டி தீர்மானத்தை நிறைவேற்ற வாருங்கள்.

வாரீர் திரண்டு!

கருப்புக் கொடிகள் காட்ட வாரீர்!

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Free Printers 14, ... al Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)